பக்கங்கள்: 15

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 04 வெள்ளிக்கிழமை 19.05.2024 கதிர் 191

# அமெ. காங்கிரஸில் தமிழர்களுக்கு ஆதரவாகத் தீர்மான முன்மொழிவு

## நடந்தது இனப்படுகொலை என ஏற்குமாறும் அழுத்தம்

**இலங்கை ஆட்சியாளர்கள் தமிழ்மக்களிற்குஎதிரானஇனப் படுகொலையில் ஈடுபட்டது என்பதைஅமெரிக்ககாங்கிரஸ் ஏற்றுக்கொள்ளவேண்டும் ஈழத்தமிழர்களிற்கான சுதந்திரம் குறித்த சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவதை நோக்கிய செயற்பாடுகளில் ஈடுபடவேண்டும்எனக்கோரும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானம்** ☞ 2

## இனி இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் நாளை மறுதினம் வவுனியாவில் நடைபெற உள்ள நிலையில் கட்சியின் பெருந் தலைவர் சம்பந்தன் குட்டையைக் குளப்பிவிட்டுவிட்டார். கட்சிக்குள் மாவையர், சிறீதரன், அரியநேந்திரன், சிறீநேசன், தவராசா போன்றோர் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் என்ற கருத்தை ஆதரித்து நிற்கும் நிலையிலும் அதற்கு ஆதரவான முடிவை மத்திய செயற்குழு நிச்சயம் எடுக்கும் என்று அவர்கள்எதிர்பார்த்துள்ளநிலையிலும் சம்பந்தனின் முடிவு அவர்களுக்குக் கடும் நெருக்கடியைக் கொடுக்கும் வகையில்அமைந்துள்ளது. அதனால் மே 19 கூட்டத்தில் இது தொடர்பில் அனேகமாக எந்தவொரு முடிவும் எடுக்கப்படாமல் போவதற்கான வாய்ப்புக்களே அதிகம் உள்ளன.

தமிழ்ப் பொது வேட்பாளர் யோசனையை சில்லி ஐடியா (Silla idea- முட்டாள்தனமானது), கிரேஸி ஐடியா (Crazy idea - பைத்தியகாரத்தனமானது) என்று தூக்கிக் கடாசியிருக்கிறார் சம்பந்தன். நேற்றுத் தான் அழைத்துச் ☞ 2

## சனிக்கிழமை வவுனியாவில் நினைவேந்தல்

போரில் உயிரிழந்தவர்களுக்கான நினைவேந்தல் நிகழ்வு வவுனியாவில் எதிர்வரும் சனிக்கிழமை மாலை 5 மணிக்கு வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வன்னி மக்களுக்கான ஒன்றியம், வன்னி மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்கம், சிறந்த இலங்கைக்கான மன்றம், காணாமலாக்கப்பட்டவர்களின் பிள்ளைகளின் சங்கம் உலகத் தமிழர் பேரவை தர்மசக்தி ஒன்றியம் ஆகியன இணைந்து இந்த நிகழ்வினை ஏற்பாடு செய்துள்ளன.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் அரசியல்வாதிகள் ☞ 9

## கொழும்பில் இன்று நினைவேந்தல் நிகழ்வு

போரில் உயிரிழந்தவர்களுக்கு கொழும்பு விஹாரமகாதேவி பூங்கா புத்தர் சிலைக்கு அருகாமையில் இன்று மாலை ஆறு மணிக்கு நினைவேந்தல் நிகழ்வு முன்னெடுக்கப்படவுள்ளது.

வடக்கிலும், தெற்கிலும் மரணித்தவர் நம்மவரே, எம்தாய்நாட்டில்தம் உயிரைஇழந்தஅவர்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தனையோடு மௌனம் செலுத்தி அஞ்சலி செய்வதற்கு அனைவரும் ☞ 9

## உண்மை அறியும் ஆணைக்குழுவிற்கு சர்வதேச நிபுணர்களும் கூட்டாக எதிர்ப்பு

### முயற்சியைக் கைவிடுமாறு வலியுறுத்து

**உண்மை ஐக்கியம் நல்லிணக்கம் தொடர்பான ஆணைக் குழுவை அமைப்பதற்கான சட்டத்தை உருவாக்கும் பணிகளை முன்னெடுப்பதை இலங்கைஆளும்தரப்பு கைவிடவேண்டும்என்று நிலைமாற்றுகால நீதி மற்றும் மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச நிபுணர்கள் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளனர்**

**அவர்கள் இது தொடர்பில்விடுத்துள்ள அறிக்கையில்** ☞ 8

## பொருளாதார மறுசீரமைப்புச் சட்டமூலத்தை பொது ஜன பெரமுனவினர் எதிர்க்கவேண்டும்

### டலஸ் அழகப் பெரும எம்.பி. வலியுறுத்து

அரச நிறுவனங்களைத் தனியார்மயப்படுத்துவதை நிறுத்துமாறு மகிந்த ராஜபக்ச ஜனாதிபதியிடம் விடுத்த கோரிக்கையை ரணில் நிராகரித்துவிட்ட நிலையில், நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ள பொருளாதாரமறுசீரமைப்புசட்டமூலத்துக்கு எதிராகப்பொதுஜனபெரமுனவின் உறுப்பினர்கள் அனைவரும் வாக்களிக்கவேண்டும்.

இவ்வாறு சுதந்திர மக்கள் சபையின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ்அழகபெருமதெரிவித்தார்.

கொழும்பில் உள்ள சுதந்திர மக்கள் சபை காரியாலயத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசும்போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர்அங்குமேலும் தெரிவித்ததாவது,

அரச நிறுவனங்களை மறுசீரமைக்கமுன்னெடுத்துள்ள நடவடிக்கைகளைமுழுமையாக இடைநிறுத்துமாறும், ஜனாதிபதி தேர்தலின் பின்னர் ஸ்தாபிக்கப்படும் புதிய ஆளும் தரப்பிடம்அந்தப்பொறுப்பை ஒப்படைக்குமாறும் ☞ 9

## முள்ளிவாய்க்கால் கஞ்சிக்கு தடை விதித்ததற்கு கரு ஜெயசூரிய வருத்தம்

### ஒட்டுமொத்த சமூகமும் உணர்வுபூர்வமாக செயற்படவேண்டும் என்றும் வலியுறுத்து

மூதூரில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கலைத்தடைசெய்தமை மற்றும் கஞ்சி வழங்கியவர்களைக் கைதுசெய்யதமைஆகியவற்றுக்குசமூகநீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவர் கரு ஜயசூரிய வருத்தம் தெரிவித்துள்ளார். போர்க் காலத்தில் இறந்தவர்களையும் காணாமல்போனவர்களையும் பற்றி ஒட்டுமொத்த சமூகமும் உணர்வு பூர்வமாகச் செயல்படவேண்டியுள்ளது என்றும் அவர் வலியுறுத்தினார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

போர்க்காலகட்டத்தில் உயிரிழந்தமற்றும் ☞ 9

## முள்ளிவாய்க்கால் கஞ்சிக்கான நீதிமன்றத் தடை விலக்கப்பட்டது

முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சுவது தொடர்பாக பிறப்பிக்கப்பட்டிருந்த தடையை மூதூர் நீதிமன்றம் அகற்றியிருப்பதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சுகாஸ் தெரிவித்தார்.

சேனையூர்பகுதியில் முள்ளிவாய்க்கால்கஞ்சி காய்ச்சிபரிமாறியகுற்றச் சாட்டில் கைதாகியுள்ள நால்வருக்கு எதிரான வழக்கானது, நகர்த்தல் பத்திரத்தின்மூலம்மூதூர் நீதிமன்றில் நீதிவான் தஸ்னீம் பௌசான் முன்னிலையில்நேற்றை எடுத்துக்கொள்ளப்பட்டது.

எதிராளிகள் சார்பில் வழக்குரைஞர்கள் முன்வைத்த சமர்ப்பணங்களை ஆராய்ந்த நீதிவான், இவ்வழக்கில் எதிரிகள் ஐ.சி.சி.பி.ஆர் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளகாரணத்தினால் அவர்கள்தொடர்பான அறிக்கையை துரிதமாக ☞ 8

## ஓ.எல். பரீட்சை குறித்து மேலும் முறைப்பாடுகள்

கா.பொ.த.சாதாரண பரீட்சையில்மேலும்சில மோசடிகள் தொடர்பில் இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, 14 மாணவர்களுக்கு புவியியல்வினாத்தாளில் சில பிரிவுகள் வழங்கப் படவில்லை என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

அதேபோல்,இரண்டு விசேட தேவையுடைய மாணவர்களுக்கும் பரீட்சை மேற்பார்வையாளர்களால்இடையூறு ஏற்படுத்தப்பட்டதாகவும் முறைப்பாட்டாளர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

சாதாரண தரப் பரீட்சையில் பிழைகள் காணப்பட்டதாகவும் மற்றும் பரீட்சை நிலையங்கள் சிலவற்றில் மோசடிகள் இடம்பெற்றதாகவும் தொடர்ந்து குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு ☞ 9

## சம்பூர் கைதுகள் தமிழர்களுக்கு எதிரான அரசின் தொடரும் இனவிரோத செயற்பாடு

### யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் கண்டனம்

சம்பூரில்முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறியவர்களைக் கைது செய்த கடும்போக்கான நடவடிக்கைகள் தமிழர்களுக்கு எதிராகத் தொடரும் அரசின் இன விரோதத்தையும் வெளிக்காட்டுகின்றன என்று யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் கவலை வெளியிட்டுள்ளது.

இலங்கையின் வடக்கு, கிழக்கில் இறுதிப் போர் நினைவேந்தல் மீதானஅரசஅடக்குமுறை தொடர்பாக யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில்இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப் பதாவது:

இலங்கையில்ஆயுத மோதல் முடிவுக்கு ☞ 8

## இலங்கையை வந்தடைந்தார் மன்னிப்புச் சபையின் தலைவர்

சர்வதேசமன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம் ஆக்னெஸ் காலமர்ட் நேற்று இலங்கைக்கு வருகை தந்துள்ளார்.

சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகமான ஆக்னெஸ்காலமர்ட்டின் தெற்காசியாவிற்கான முதல் பயணம் இது வாகும். அவர் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை நாட்டில் தங்கியிருக்கவுள்ளார்.

இந்நிலையில் எதிர்வரும் 18 ஆம் திகதி, இறுதிக்கட்ட யுத்தத்தில் உயிர்நீத்த உறவுகளை நினைவுகூரும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலிலும் அவர் பங்கேற்கவுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

சந்தித்த சுமந்திரனிடமே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். கட்சி உறுப்பினர்களிடம்தான்சொன்னார் என்று கூறி இந்த விடயங்களைத் தெரிவிக்குமாறு கூறியே அவர் இதனைத் கூறியிருக்கிறார்.

தமிழ் மக்களின் கோரிக்கை இலங்கை அரசினாலும் உலகத்தினாலும் ஏற்கப்பட்டு அதனடிப்படையில் உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய ஒரு அதிகாரப் பகிர்வுத் தீர்வுக்கு கொழும்பு இணங்கி, அதனை சர்வதேசமும் ஏற்றுக்கொண்ட பின்னர், தமிழ் மக்களின் விருப்பு என்ன என்பதை உலகுக்குக் காட்ட ஒரு பொது வாக்கெடுப்பு நடத்துவது என்பதைத் தான்சம்பந்தன்முட்டாள்தனமானது, மைத்தியக்காரத்தனமானது என்றெல்லாம் விமர்சித்திருக்கிறார்.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்தவேண்டும் என்று கூறுகின்ற தரப்பினர், அதற்காகக் கூறும் காரணங்களில் ஒன்று, தமிழ் மக்களின் விருப்பத்தை சர்வதேசத்திற்கு மீண்டும் ஒருமுறைவெளிப்படுத்தும்கருத்துக் கணிப்பாக - பொது வாக்கெடுப்பாக - இந்த ஜனாதிபதித் தேர்தலைப் பயன்படுத்தலாம் என்பதாகும். அதற்கே சம்பந்தன் இப்படிப் பதிலளித்திருக்கிறார்.

''உள்ளக சுய நிர்ணய உரிமையின் அடிப்படையில் இணைந்த வடக்கு - கிழக்குக்கு சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வுடன் கூடிய தீர்வு என்பதுதான் சர்வதேச மட்டத்தில் இலங்கை அரசும்சேர்ந்துஇணங்கிக்கொண்ட கடைசி விடயம். அதற்கு பாதிப்பு குந்தகம் ஏற்படுத்தும் விதத்திலான முடிவு எதையும் தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற விசப் பரீட்சை ஊடாக செய்வதற்குத் தமிழ் அரசுக் கட்சியினர் இணங்கிவிட - இறங்கிவிடக் கூடாது.'' என்பது அவரது கருத்தின் சாராம்சமாக இருந்திருக்கிறது.

இதைத்தனது ஆணித்தரமான கருத்தாக வவுனியாக் கூட்டத்தில் தெரிவிக்குமாறும்சுந்பந்தன்உறுதிபட சுமந்திரனிடம் தெரிவித்துள்ளார். அவரது கருத்துக்குக் கட்சியினர் இனியும் மதிப்புக் கொடுப்பார்களா இல்லை அவரும் தெற்கு அரசியல்வாதிகளுடன் 'டீல்' பேசிவிட்டார்என்றுகூறிஅவரையும் துரோகிஎனஅறிவித்துதங்கள்பாட்டில் முடிவெடுப்பார்களாஎன்பதுஇன்னும் ஓரிரு தினங்களில் தெரிந்துவிடும்.

இந்த விடயம் குறித்துத் தான் மாவை சேனாதிராசவுடனும் சிறீதரனுடனும் ஏற்கனவே பேசி இருக்கிறார் என்பதையும் சம்பந்தன் நேற்று சுமந்திரனிடம் தெரிவித்திருக்கிறார். தன்னை நேரில் சந்தித்த சிறீதரனிடமும் தொலைபேசி மூலம் மாவையரிடமும் விவரங்களை விளக்கிச் சொல்லியிருக்கிறார் என்பதையும்அவர்கூறியிருக்கிறார். மாவையரைத் தன்னைச் சந்திக்க வரும்படி கூறியிருந்தார் என்றும் முதலில் சரியென்ற அவர் பின்னர் உடல்நிலை ஒத்துழைக்காத காரணத்தால்தன்னால்கொழும்புக்கு வரமுடியவில்லை என்று தெரிவித்தார் என்றும், அதனால் தொலைபேசியில் அவருடன் பேசி இந்தவிடயங்கள்குறித்துஅவருக்குத் தெளிவுபடுத்தினார் என்றும் சம்பந்தன் தெரிவித்திருக்கிறார்.

கட்சிக்குள் யார் யாரெல்லாம் தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிக்கிறார்கள், இதுவரையில் அதற்கெதிராகக் கருத்துத் தெரிவித்தவர்கள் யார் என்பன போன்றவிவரங்களைஎல்லாம்அவர் சுமந்திரனிடம் இருந்து விரிவாகக் கேட்டறிந்து கொண்டுள்ளார். கட்சியின்மத்தியகுழுக்கூட்டத்திற்கு இடையில் மாவையருடன் தான் மீண்டும் ஒரு தடவை தொலைபேசியில் உரையாடி, செய்ய வேண்டிய கருமங்கள் குறித்து அவருக்கு கண்டிப்பான அறிவுறுத்தல்களை வழங்குவார் என்றும் தெரிவித்திருக்கிறார்.

தமிழ் பொது வேட்பாளர் யோசனை தமிழர்களின் எதிர்காலத்தை ஆபத்துக்குள் சிக்க வைக்கும் விசப் பரீட்சை என்றும் விழிக்க அவர் தவறவில்லை. தமிழர்களின் உரிமைக்கான போராட்டம் மிக நீண்டது. பல கட்டங்களைத்தாண்டிவந்துள்ளோம். ஒஸ்லோ

''உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் இணைந்த வடக்கு - கிழக்குக்கு சமஷ்டிமுறையிலானதீர்வுக்குஅந்த அறிவிப்பு மூலம் இலங்கை அரசு இணங்கி வந்துள்ளது. அதற்குக் குறைந்த எதற்கும் இணங்கும் ஏற்பாடுகளுக்கு நாம் போக முடியாது. அந்த நிலைப்பாட்டை சிதறடிக்கும் விதமான ஒரு விஷப் பரீட்சைக்குப் பொது வேட்பாளர் என்ற அடிப்படையில் தமிழினம் இணங்கவோ, இறங்கவோ கூடாது.

வடக்கு - கிழக்கு இணைப்புத் தொடர்பாக இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் ஓர் ஏற்பாடு உண்டு. இணைப்பை நிரந்தரமாக்க முன்னர் கிழக்கில் ஒரு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தி அனுமதிபெற வேண்டுமென்பதே அது. ஆனால், அது 19 வருடங்களாக நடைமுறைப்படுத்தப்படாமல் இணைப்புநீடிக்கப்பட்டது. காரணம், கிழக்கில் இடம்பெயர்ந்த மக்கள் அனைவரும்மீளக்குடியமர்த்தப்பட்ட பின்னரே அந்தத் தேர்தலை நடத்தவேண்டும் என்று அதில் தெரிவிக்கப்பட்டிருந்ததுதான்.

இப்படிஅந்தஏற்பாடுஇருக்கின்ற காரணத்தினால் இனி எப்போதும் அத்தகையசர்வஜனவாக்கெடுப்பை நடத்த முடியாது - வடக்கு,கிழக்கு இணைப்பை வருடாந்தம் நீடிப்பதைத் தவிர' - என்று தமக்குள் ஜே.ஆர்.ஜெயவர்த்தன நொந்து கொண்டார். அப்போதே கிழக்கில் தமிழ் மக்கள் இடம்பெயர்ந்திருந்தார்கள் என்றால், இப்போது அதைவிட அதிகமானவர்கள்வெளிநாடுகளுக்கு இடம்பெயர்ந்துவிட்டார்கள். இந்த நிலையில் பொது வாக்கெடுப்பு போன்ற ஒன்றைக் கேட்பது -விசப் பரீட்சை. நாமே கோரி அதில் இறங்குவது என்பது நம்மைநாமே அழிப்பதற்குஒப்பானதாகும். ஆகவே, அத்தகைய திட்டத்துக்குத் தமிழ் அரசுக்கட்சி இடம்கொடுக்கக்கூடாது.

இந்த ஜனாதிபதித் தேர்தலில் நாங்கள்யாரை ஆதரிக்கவேண்டும் என்பது தொடர்பில் அவசரப்படத் தேவையில்லை. முதலில் பிரதான தென்னிலங்கைக் கட்சிகளின் வேட்பாளர்களின் தெளிவான நிலைப்பாடு அவர்களின் தேர்தல் விஞ்ஞாபன அடிப்படையில் வெளியான பின்னர், அவற்றைப் பரிசீலித்து சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் கலந்துரையாடிய பின்னர் நாம் ஒரு தீர்க்கமான தீர்மானத்தை எடுக்கலாம். அதற்கு முன்னர்அவசரப்படதேவையில்லை. இதை என்னுடைய செய்தியாகத் தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழு கூட்டத்தில் கூறுங்கள்'' என்று நீட்டி முழங்கியிருக்கிறார் பெருந் தலைவர்.

அதுமட்டுமல்லாமல் தெற்கில் உள்ள பிரதான ஜனாதிபதி வேட்பாளர்கள் மூவருடனும் இது விடயம் தொடர்பில் சுமந்திரனைத் தொடர்ந்து கலந்துரையாடுமாறும் அவர் பணித்திருக்கிறார். ஆக, மொத்தத்தில்தமிழ்பொதுவேட்பாளர் விடயத்தில் இரண்டு வாரங்களில் பதில் சொல்கின்றோம் என்று சிவில் சமூகத்திற்கும் மற்றைய அரசியல் கட்சிகளுக்கும் சொல்லிவிட்டு வந்த தமிழ் அரசுக் கட்சியினருக்கு இதுவொரு தலையிடியாக வந்த -விழுந்துள்ளது. ஏனெனில்கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் தங்களுக்கே பெரும்பான்மை இருக்கின்றது என்றும் அதனால் பொதுவேட்பாளருக்குச்சாதகமாகவே கட்சி முடிவெடுக்கும் என்றும் மே 4 யாழ்ப்பாணத்தில் நடந்த கூட்டத்தில் கலந்துகொண்டிருந்த தமிழ் அரசுக் கட்சியினர் சிலர் வீரவசனம் பேசியிருந்தனர்.

அவர்கள்கூறியதன்படிஇப்போது கட்சிமுடிவெடுக்கவேண்டும்என்றால் பெருந்தலைவர் சம்பந்தனை சிங்கள வேட்பாளர்களுடன் 'டீல்' போட்டுவிட்டவர்என்றும்தமிழ்இனத் து-ரோகி என்றும் அவர்கள் மத்திய செயற்குழுவில்வசைபாடவேண்டும். அப்படியானால்தான் அங்கும் பெரும்பான்மையினரைத் தம்வசப்படுத்திபொதுவேட்பாளருக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுக்க முடியும். இல்லையேல்அதுமுடியாத காரியம். ஏனெனில்கட்சியில்பலரும் சம்பந்தனின் கருத்துக்களுக்கு மதிப்பளிக்கும் நிலையில்தான் இன்னமும் இருக்கின்றனர். அவர்களையெல்லாம் பொதுவேட்பாளர் முடிவுக்கு ஆதரவளிக்க வைக்கவேண்டும் என்றால் சம்பந்தனைத் துரோகியாக்குவதைத் தவிர வேறு வழியில்லை. அப்படிச் சம்பந்தனைத் துரோகியாக்கிவிட்டு அவர்கள்கிழக்கிற்குச்செல்லமுடியுமா என்பதும் கேள்விக்குறிதான்.

இப்படிப்பட்ட குழப்ப நிலையில் கட்சியின் மே 19 கூட்டத்தில் தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்தில் ஒரு முடிவு கிட்டுவது துர்பலமே என்று தெரிகின்றது. பொது வேட்பாளர் முடிவோடுமாவையரும் மனப்பட்டுத்தான் நிற்கின்றார் என்றாலும் சம்பந்தனைத் துரோகியாகக்காட்டிஅவருக்குஎதிராக ஒரு தீர்மானத்தை எடுப்பதற்கான துணிச்சல்மாவையரிடம்இருக்கிறது என்றுஎதிர்பார்க்கமுடியாது. அதனால் பொ-து வேட்பாளர் முடிவுக்கு ஆதரவாகவும்எதிராகவும்கட்சிக்குள் காரசாரமானகருத்துக்கள்இருந்தால் முடிவுஎதுவும்எடுக்காமல்மாவையர் அதனை ஒத்திவைப்பதற்கான சாத்தியங்களே அதிகம் உண்டு.

பார்க்கலாம், கட்சிக்குள் சம்பந்தனின் வார்த்தைகளுக்கு இருக்கும் மதிப்பு என்ன என்பது அவரது அரசியல் அனுபவ முதிர்ச்சியை கட்சியின் இரண்டாம் மூன்றாம் நிலைத் தலைவர்கள் மதிக்கிறார்கள் என்பதும் ஓரிரு நாள்களில் தெரிந்துவிடும்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

# வரப்போகும் நாள்களில் கன மழைக்கு வாய்ப்பு

நாட்டின் பல பகுதிகளிலும் 100 மில்லிமீற்றருக்கும் அதிகமான மழைவீழ்ச்சி பதிவாகும் சாத்தியம் காணப்படுவதாகவளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

நாட்டை சூழவுள்ள கடற்பிராந்தியங்களைஅண்மித்துஏற்பட்டுள்ள தளம்பல் நிலை காரணமாக எதிர்வரும் நாட்களில் அதிக மழையுடனான வானிலை நிலவும் என வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதற்கமைய மேல், சப்ரகமுவ, மத்திய, ஊவா மாகாணங்களில் 100 மில்லிமீற்றருக்கும் அதிக மழைவீழ்ச்சி பதிவாகும் சாத்தியம் காணப்படுவதாக எதிர்வுகூறப்பட்டுள்ளது.

வடமேல்மாகாணத்திலும்காலி, மாத்தறைமாவட்டங்களிலும்பலத்த காற்றுடன் மழை பெய்யலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மழையுடனான வானிலையால் 06 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பதுளை, கண்டி கேகாலை, களுத்துறை, குருநாகல், நுவரெலியா, மாத்தளை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களின் சில பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குட்பட்ட பகுதிகளுக்கு முதலாம் கட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, பதுளை, எல்ல - வெல்லவாய வீதி, இன்று மாலை 6 மணி முதல் நாளை காலை 6 மணி வரை முழுமையாக மூடப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்தது.

கற்பாறைகள் சரிதல் மற்றும் மண்சரிவு அபாயத்தை கருத்திற்கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

## அமெ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அமெரிக்க காங்கிரஸில் முதற்தடவையாக சமர்ப்பிக்கப் பட்டுள்ளது.

முன்வைக்கப்பட்டுள்ள தீர்மானத்தின்முழுவடிவம்வருமாறு,

ஈழத் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையையும்நீடித்து நிலைக்கக்கூடியசமாதானத்துக்கான அவர்களின் கோரிக்கையான சுதந்திரத்திற்கான பொது வாக்பகடுப்பையும் ஆதரிப்பதன் மூலம் 15 வருடங்களுக்கு முன்னர் 18 மே 2009இல் முடிவடைந்த இலங்கையில் ஏறத்தாழ 30 வருடகால ஆயுத முரண்பாடுகளின்போது இழந்த பல நூறாயிரக்கணக்கான உயிர்களை அங்கீகரித்தலும் தமிழ் இனவழிப்பு உட்பட்ட இறந்தகாலவன்முறைகளின் மீள்நிகழாமையை உறுதிப்படுத்தலும் என்ற தலைப்பில் இந்த தீர்மான வரைவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

நிக்கல் (தனக்காகவும், இலினாய்ஸின் வைலட், டேவிஸ்;, வட கரோலினாவின் மல்லியோடாகிஸ், ஹரி, டேவிஸ்; பென்சில்வேனியாவின் செல்வி லீ மற்றும்வடகரோலினாவின்ஜாக்சென் ஆகியோருக்காகவும்) பின்வரும் தீர்மானத்தை சமர்ப்பித்தார. அதன் பிரதி வெளியுறவுக்குழுவுக்கும் அனுப்பிவைக்கப்பட்டது.

18 மே 2024 இலங்கை அரசுக்கும் பல்வேறுபட்ட ஆயுதம் தாங்கிய தமிழர்களின் சுதந்திரத்திற்கானஇயக்கங்களுக்கும் இடையிலான 26 ஆண்டுகால ஆயுத முரண்பாடுகள் முடிவுக்கு வந்து 15ஆவது ஆண்டு நிறைவை குறிக்கும்,

அவ்வாறு இருக்கையில்சிங்கள மக்களும்தமிழ்மக்களும்தற்போது இலங்கை என்று அழைக்கப்படும் தீவில் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகத் தனித்தனியான மற்றும் இறமை கொண்ட சிங்கள மற்றும் தமிழ் இராச்சியங்களில் வாழ்ந்தாலும் 1833 சிங்கள மற்றும் தமிழ்பிரதேசங்கள் ஆங்கிலேயரால் ஒரே ஒற்றை ஆட்சி நிர்வாகத்தின் கீழ் இணைக்கப்பட்டன,

அவ்வாறு இருக்கையில் அனைத்துப்பிரதானதமிழ்அரசியல் கட்சிகளும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் கீழ் ஒன்றிணைந்து 14 மே 1976 இல் வட்டுக்கோட்டை தீர்மானத்தைஏற்றுக்கொண்டுதமிழ் தேசத்தின் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தியும் திறமையுள்ள சுதந்திரமான மதச்சார்பற்ற தமிழ் இனத்தை தமிழ் மக்களுக்கான தீர்வாகவும் அழைப்பு விடுத்ததுடன் தமிழர்கள்தொடர்ந்துவந்ததேர்தலை மாதிரிபொதுவாக்கெடுப்பாகக்கருதி தமது அமோகதேர்தல் ஆணையை சுதந்திரமான இளமையுள்ள தமிழ்நாட்டிற்கு வழங்கினார்கள்,

அவ்வாறு இருக்கையில் 1983இல் கொண்டுவரப்பட்ட இலங்கைஅரசமைப்பின் ஆறாவது திருத்தம், ஈழத் தமிழ் மக்கள் தமது சுதந்திரத்திற்காக வாழும் திறனை மட்டுப்படுத்தியதன் மூலமும் அத்தகையசெயற்பாட்டை குற்றம் ஆக்கியதன் மூலமும் அத்திருத்தம் சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ள கருத்து வெளியிடுவதற்கானசுதந்திரத்தினை மறுதலிக்கின்றது.

அவ்வாறு இருக்கையில் சர்வதேசசமூகம் இனமுரண்பாட்டை தீர்க்குமாறு தொடர்ச்சியாக விடுத்த அழைப்புகளை அடுத்து இலங்கை ஈழத் தமிழர்களுடன் இந்தக் கலந்துரையாடலையும் மேற்கொள்ளாது ஒருதலைபட்சமாக முரண்பாட்டுக்கான தீர்வு எனக் கூறி அரசமைப்புக்கு 13ஆவது திருத்தத்தை 1987இல் அறிமுகப்படுத்தியது. ஆனால் அது தமதுமக்களின்அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யவில்லை என்று ஈழத் தமிழ் அரசியல் தலைவர்களால் நிராகரிக்கப்பட்டது. அத்துடன் அவர்களது தாயகம் இன்னமும் சுயாட்சியற்ற பிரதேசமாகவே உள்ளது. அவ்வாறு இருக்கையில் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பாக இருந்த அப்போதைய உதவி இராஜாங்க செயலாளர் ரிச்சர்ட் பவுச்சர் 1ஜூன் 2006 இல் போர்க்கால இலங்கைக்குச் சென்றிருந்தபோது அவர் இவ்வாறு ஒப்புக்கொண்டார்.

"தமிழ்சமூகத்தால்எழுப்பப்படும் நியாயமானபிரச்சினைகள்உள்ளன மேலும் அவர்கள் விரும்புவதைப் போலதங்கள்சொந்தவாழ்க்கையை கட்டுப்படுத்தவும் தங்களது சொந்த விதிகளை ஆளவும் அவர்கள் தாங்கள் பாரம்பரியமாக வாழ்ந்த பகுதிகளில் தங்கள் தாயகத்தில் தங்களைத் தாங்களை ஆளவும் மிகவும் நியாயமான விருப்பத்தை கொண்டுள்ளனர்'' என்று தெரிவித்திருந்தார்.

அவ்வாறு இருக்கையில் மே 2009இல்ஐக்கியநாடுகள்சபையின் செயலாளர்நாயகம். இலங்கைக்குச் சென்றதைத தொடர்ந்து அவரும் இலங்கையின் ஜனாதிபதியும் இணைந்து வெளியிட்ட செய்தியில் இலங்கை சகல சமூகங்களினதும் அபிலாஷைகளையும் கவலைகளையும் தீர்க்கக்கூடிய நிலைத்து நிற்கக்கூடிய அரசியல் தீர்வை கண்டடைவதற்கு உறுதியளித்ததுடன் சர்வதேச மனிதாபிமானச் சட்டம் மற்றும் மனித உரிமைகள் சட்டம் என்பன மீறப்பட்டமைக்கு பொறுப்புகூறும் செயல்முறைக்கும் உறுதி அளித்திருந்தது.

அவ்வாறு இருக்கையில் ஜனநாயக வழிமுறைகளை வெளிப்படுத்துவதில் தேர்தல்கள் மற்றும்பொது வாக்கெடுப்புக்களின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியும் இலங்கை அரசின் அதிகாரப் பகிர்வு தொடர்பான உறுதி மொழிகளை நிறைவேற்ற அழைப்பு விடுத்தும் மேலும் ஆதாரங்களையும்தகவல்களையும் சேகரிக்கவும் ஒருங்கிணைக்கவும் பகுப்பாய்வு செய்யவும் மற்றும் எதிர்காலத்தில்உருவாக்கப்படக்கூடிய சாத்தியமான பொறுப்பு கூறல் செயல்முறைகளுக்கான தந்திரோபாயங்களைஉருவாக்கவும் மனித உரிமைகளுக்கான உயர்ஆணையருக்கு உள்ள ஆற்றலை விரிவாக்கவும் வலியுறுத்தவும் செய்த ஐக்கிய நாடுகள்சபையின்மனிதஉரிமைகள் பேரவையின் 51/1 தீர்மானத்திற்கு ஐக்கிய அமெரிக்கா இணை அனுசரணை வழங்கியது.

அவ்வாறு இருக்கையில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான உயர்ஆணையரின் ஜனவரி 2021 அறிக்கையானது இவ்வாறு குறிப்பிடுகின்றது "இலங்கையின் தற்போதைய போக்கானது பெரும் மனித உரிமை மீறல்களுக்கு வழி வகுத்த கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் மீளநிகழ்வதற்கான அரங்கை உருவாக்குகின்றது. மேலும் தேசிய அளவில் பொறுப்புக் கூறலுக்கான ஆட்சியாளர்களின் விருப்பமின்மையும் மற்றும் இயலாமையும் வெளிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் இது சர்வதேச நடவடிக்கைகுரிய நேரமாகும்.

அவ்வாறு இருக்கையில் போர் முடிந்து 15 ஆண்டுகளுக்குப் பிறகு ஈழத்தமிழர்களின் பாரம்பரிய தாயகம் இலங்கையால் பெரிதும் இராணுவமாக்கப்பட்டுள்ள நிலையில் தமிழர் பிரதேசத்தில் நிலஅபகரிப்பு மற்றும்தமிழர்களின் பாரம்பரிய முக்கியத்துவம் உள்ள இடங்கள் மற்றும் போர் வீரர்களின் மயானங்களை அழிப்பதில் ஈடுபட்டுள்ளதுடன்இனப்போருக்கான அடிப்படை காரணிக்கு இதுவரை தீர்வு காணப்படவும் இல்லை.

மேலும் இலங்கை பல வாக்குறுதிகளை வழங்கி உள்ள போதும்பொறுப்புக்கூறல்,நீதிமற்றும் அரசியல்தீர்வுஆகியவற்றில்போதிய முன்னேற்றத்தை அடையவும் இல்லை. கடந்த காலத்தைப் போன்றே ஈழத் தமிழ் மக்களுக்கு

தொடர்ச்சி 8ம் பக்கம்....

# நாடாளுமன்றத் தேர்தல் ஒன்று நடத்தப்பட்டால் தற்போதுள்ள 155 எம்.பிக்கள் நிராகரிக்கப்படுவர்

## அப்துல்லாஹ் மஹ்ரூப் ஆரூடம்

(எச்.எம்.ஹலால்தீன்)

பொதுத் தேர்தல் நடத்தப்பட்டால் தற்பொழுது 225 உறுப்பினர்களில் 155 உறுப்பினர்கள் நிராகரிக்கப்படுவார்கள் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தேசிய அமைப்பாளரும், முன்னாள் பிரதியமைச்சருமான அப்துல்லாஹ் மஹ்ரூப் தெரிவித்தார்.

நேற்று 11.30 மணிக்கு கிண்ணியாவில் அவரது காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது தெரிவித்தார்.

மேலும் அவர் பேசும்போது -

இந்த நாட்டிலே தேர்தல் தொடர்பாக பேசப்பட்டு இருக்கின்ற போது -

அபிவிருத்திக்காக ஒரு பிரதேசத்திற்கு 10 மில்லியன் ரூபா ஓர் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. உள்ளூராட்சிமன்ற முன்னாள் உறுப்பினர்கள் இடம்பெற வேண்டுமென ஒரு மாதமாக காலமாக பேசப்பட்டுக் கொண்டிருக்கிறது.

உள்ளூராட்சி மன்ற மாகாண சபை அமைச்சரும் பிரதமருமான தினேஷ் குணாவர்தன மாகாண சபை உறுப்பினர்களோ முன்னாள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களோ குழுவில் இடம்பெற மாட்டார்கள்.

கல்வி சார்ந்த நிர்வாகம் சார்ந்த உறுப்பினர்கள் கொண்ட குழுவே அமையும் எனக் கூறப்படுகிறது.

நிதி தொடர்பான தேர்தல் இலாபத்துக்காகச் செய்யப்படுகின்ற ஒரு விடயம் என்பது இன்று விடுபட்டு இருக்கின்றது.

மாறாக, தற்பொழுது ஜனாதிபதி தேர்தல் தொடர்பாகவும் நாடாளுமன்ற தேர்தல் தொடர்பாகவும் மக்கள் மத்தியில் பரவலாக பேசப்படுகின்ற போது மூன்று பிரதான கட்சியைச் சேர்ந்த தலைவர்கள் முதலாவது இந்த நாட்டினுடைய ஜனாதிபதி ஜனாதிபதி தேர்தலை விரும்புகின்றது போன்று ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவும் ஜனாதிபதி தேர்தலை விரும்புகின்றார்.

மக்கள் மத்தியில் பிரபல்லியம் இல்லாத மூன்று வேட்பாளர்கள் தாங்களும் தனியாக போட்டியிட விரும்புகின்றோம் என கூறுகின்றார்கள்.

ஜனாதிபதி தேர்தலில் மொட்டு கட்சியில் தாங்கள் போட்டியிட்டால் தோல்வியை தழுவ கூடும் என்று கூறுகின்றார்கள். பொது ஜன முன்னணி நாடாளுமன்றத் தேர்தலை கோருகின்றது.

அதேபோன்றுநாட்டினுடையபெரும்பான்மைபொதுமக்கள் ஒரு பொதுத் தேர்தலை எதிர்பார்க்கின்றார்கள் காரணம்.

நடந்து முடிந்த சம்பவங்கள் அனைத்தையும் கோட்டா பாய ராஜபக்ஷ ஆட்சியிலே இந்த நாட்டினுடைய சிறுபான்மை பெரும்பான்மை சமூகமும் உட்பட பல பாதிப்புக்குள்ளாகியதன் காரணமாக பொதுமக்கள் ஒரு பொதுத் தேர்தலை விரும்புகின்றார்கள்.

குறிப்பாக.225 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 155 உறுப்பினர்கள் நிராகரிக்கப்படுவார்கள் பொதுத் தேர்தலில் மக்கள் விரும்புகின்ற நாடாளுமன்றம் அமைகின்ற போது இந்த நாட்டினுடைய ஜனாதிபதியாக இருக்கின்ற ரணில் விக்ரமசிங்க அவர்கள் ஒரு தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பது தொடர்பாகவும் தான் பொதுச் சின்னத்தில் போட்டியிடுவதாகும் கூறுகின்ற போது ஜேவிபி இனர் தங்களுடைய மணிக்கூட்டு சின்னத்தில் கேட்பதாகவும் ஐக்கிய மக்கள் சக்தி டெலிபோனிலும் கேட்பதாக கூறுகின்றார்கள்.

இது இந்த நாட்டு மக்களுடைய எதிர்பார்ப்பு என்பதை விட தங்கள் கட்சி சார்ந்த தாங்கள் சார்ந்த விடையங்களில் கவனம் செலுத்துகின்றார்கள்.

இந்த விடயத்திலே நாட்டு மக்கள் எதிர்பார்க்கின்ற பொதுத் தேர்தலை நடத்துகின்ற போது ஐக்கிய மக்கள் சக்தியும் ஜேவிபியும் நினைக்கின்றவாறு அவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களின் அங்கத்துவத்தை அதிகரிக்க விட முடியாது, இது கடந்த கால தேர்தல்களின் வரலாறு ஆனால் ஜனாதிபதி தேர்தலை வைத்தால் உங்களுக்கான சந்தர்ப்பம் இருக்கின்றது என்று கூறுகின்றார்கள்.

தனித்துவமாக ஐக்கிய மக்கள் சக்தி அவர்கள் கட்சி சார்ந்து பற்றி பேசுகின்றார்கள் இதேபோன்று ஜேவிபி தங்களுடைய கட்சி சார்ந்த வைகள் பற்றியும் தீர்மானம் எடுக்கின்றார்கள்.

இவர்கள் ஜனாதிபதி தேர்தல் வைத்தால் தங்களுக்கான சந்தர்ப்பம் இருக்கும் என்று கூறுகின்றார்கள். தனித்துவமாக ஐக்கிய மக்கள் சக்தி ஒரு கட்சி சார்ந்தவர்கள் பற்றியும் கேவிபி இனர் தங்களுடைய கட்சி சார்ந்தவர்கள் பற்றியும் தங்களுக்கு வாக்குகள் அதிகரிப்பது பற்றி கூறுகின்ற போது இந்த கட்சி தலைவர்களை உள்வாங்கி இந்த ஜனாதிபதி தேர்தலை வெல்வது தொடர்பாக எந்தத் தீர்மானத்தையும் அவர்கள் எடுக்கவில்லை.

நாட்டினுடைய ஜனாதிபதி சிறுபான்மை கட்சிகள் ஏனைய கட்சிகள் தற்பொழுது அதிகாரத்தில் இருக்கின்றவர்கள் ஆலோசிக்கின்ற போது ஆதரிக்க வேண்டும் என்ற சிந்தனையிலேயே தான் ஒரு பொது வேட்பாளராக வரவேண்டும் என கூறுகின்றனர்.

இதே நேரத்தில் ஜனாதிபதி அவர்களுடைய நேற்றைய அறிக்கை ஜூன் மாதத்தில் தான் பொதுத் தேர்தல் தொடர்பாக பேசுவேன் என கூறுகின்றார் ஆனால் மே மாதத்துக்குள் கலைக்கப்பட்டால் ஒழிய அந்த பொது தேர்தல் நடக்க முடியாது ஏனென்றால் செப்டம்பர் மாதம் 15 ஆம் திகதிக்கும் ஒக்டோபர் மாதம் 15 ஆம் தேதிக்கு இடையில் ஜனாதிபதி தேர்தல் நடைபெறுவதாக இருந்தால் ஆகஸ்ட் மாதத்திலே ஜனாதிபதி தேர்தலுக்கான அறிவிப்பு நொமினேஷன் வேட்பு மனு இறுதி நாள் தொடர்பாக வெளிப்படுத்த வேண்டும்.

மே மாதம் அறிவித்தால் ஒளிய பொதுத் தேர்தல் தொடர்பாக அந்த பொதுத் தேர்தலை ஆகஸ்ட் மாதத்துக்குள் நடத்தியாக வேண்டும் செப்ரெம்பரில் நடத்த முடியாது.

ஆகவே ஜனாதிபதியின் உடைய கூற்றிலே பொதுத் தேர்தல் தொடர்பாக தனது அறிக்கையை ஜூன் மாதத்தில் சொல்வேன் என்பது அது ஏமாற்று விடயமாகும்

இந்தவிடயத்தில்நாட்டுமக்களும்ஒருஆட்சிமாற்றத்திற்கான சந்தர்ப்பத்தையும் பொதுத்தேர்தலில் எதிர்பார்க்கின்றனர்.

பொதுஜனமுன்னணிமொட்டுகட்சியிலேஅங்கத்தவர்களை அதிகரிக்க சிந்திக்கின்றார்கள்.

அவர்களால் ஜனாதிபதி தேர்தலில் மொட்டுச் சின்னத்தை அறிமுகப்படுத்த முடியாது.(05)

## யாழ். பல்கலைக்கழக மாணவர்களினால் கல்வியங்காட்டில் முள்ளிவாய்க்கால் கஞ்சி






இனப்படுகொலைப் போரின் வலிகளை தலைமுறைகளுக்கும் கடத்தும் வகையில் தமிழர் தாயகமெங்கும் முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறும் நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டும் வரும் நிலையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களால் கல்வியங்காட்டுச் சந்தியில் புதன்கிழமை அன்று வழங்கி வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்ஒன்றியத்தின்ஒருங்கிணைப்பில்முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை வாரத்தை முன்னிட்டு தினமும் பல்வேறுபட்ட இடங்களில் முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறப்பட்டு வருகின்றது. இனப்படுகொலைப்போரின்போதுதமிழ்மக்களின் உயிர் காத்த உணவாக முள்ளிவாய்க்கால் கஞ்சி காணப்பட்டது குறிப்பிடத்தக்கது.(05)

## கிளிநொச்சி வளாக மாணவர்களால் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கல்



யாழ் பல்கலைக்கழக கிளிநொச்சி வளாக மாணவர்களால் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கி வைக்கப்பட்டது.

இறுதியுத்தத்தில் உணவுதேவையுடன் வாழ்ந்த மக்களுக்கு முள்ளிவாய்க்கால் பகுதியில் கஞ்சி வழங்கப்பட்டு உயிர் காக்கப்பட்டது.

இதனை நினைவு கூரும் வகையில் வடக்கு கிழக்கில் கஞ்சி வழங்கும் நிகழ்வு இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத் தக்கது.

(05 - 113)



காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அரசு இனியாவது புரிந்துகொள்ளட்டும்

**இதுவரை உள்நாட்டில் நிராகரிப்புக்களுக்கு உள்ளாகி வந்த ஆளும் தரப்பின் உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழு முயற்சிகளுக்கு இப்போது பன்னாட்டு நிபுணர்களிடம் இருந்தும் எதிர்ப்பு வந்துள்ளது.**

**உண்மை ஐக்கியம் நல்லிணக்கம் தொடர்பான ஆணைக்குழுவை அமைப்பதற்கான சட்டத்தை உருவாக்கும் பணிகளை முன்னெடுப்பதை இலங்கை ஆளும்தரப்பு கைவிடவேண்டும் என்று நிலைமாற்றுகால நீதி மற்றும் மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச நிபுணர்கள் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளனர்.**

**இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சிவில் சமூகத்தினருக்கு ஆதரவை வெளியிடும் வகையில் போரினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சிவில் சமூகத்தினர் வெளியிட்டுள்ள, முன்வைத்துள்ள வேண்டுகோள்களை ஆளும் தரப்பினர் செவிமடுத்து ஆராயவேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.**

**”எந்த உள்நாட்டு உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவிலும் சர்வதேச பங்களிப்பு காணப்படவேண்டும் என்ற பாதிக்கப்பட்டவர்களின் வேண்டுகோளை ஆளும்தரப்புத் தீவிரமாக ஆராயவேண்டும். உள்நாட்டு பொறிமுறை மூலம் மாத்திரம் உண்மையை நிலைநாட்ட முடியாது என்பதே பரந்துபட்ட நம்பிக்கையாகவுள்ளது**

**இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்டவர்களிற்கு உண்மை மற்றும் நீதியை உறுதி செய்வதற்காக ஐக்கிய நாடுகளின் உண்மையைகண்டறியும் செயற்பாடுகளுடன் இலங்கை இணைந்து செயற்படவேண்டும். இந்த உண்மை ஐக்கிய மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை பாதிக்கப்பட்டோர் எதிர்ப்பதால், நிலைமாற்றுக்கால நீதி விடயத்தில் அனுபவம் உள்ள வெளிநாட்டு அரசுகள் இலங்கை அரசின் முயற்சிகளிற்கு உதவக்கூடாது” என்றும்கூட பன்னாட்டு வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.**

**இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு,கிழக்கின் மக்களும் சிவில் சமூகத்தினரும் உத்தேச உண்மை, நல்லிணக்கம் ஐக்கியம் தொடர்பான ஆணைக்குழு குறித்து பல தடவை எதிர்ப்புக்களை வெளியிட்டுள்ளனர். ஏற்கனவே இப்படி அமைக்கப்பட்ட ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் நடைமுறைப்படுத்தப்படாத நிலையில், புதிய ஆணைக்குழுவால் எந்தப் பயனும் இல்லை என்று அவர்கள் தொடக்கம் முதலே இந்த முயற்சியை எதிர்த்து வருகின்றனர். காலைக்கதிரும்கூட பல தடவைகளில் இந்த முயற்சி பன்னாட்டுச் சமூகத்தை ஏமாற்றும் வித்தை என்பதைச் சொல்லி வந்துள்ளது. இப்போது அதே கருத்துக்களை வலியுறுத்தி சர்வதேச நிபுணர்களும் ஆளும் தரப்பின் முயற்சியை நிறுத்தவேண்டும் என்று கேட்டுள்ளனர்.**

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானம் குறித்த இலங்கையின் அர்ப்பணிப்பின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலகம் இழப்பீடுகளிற்கான அலுவலகம் ஆகியவற்றின் மீதான நம்பிக்கையின்மையும் உண்மை ஐக்கியம் நல்லிணக்க ஆணைக்குழு குறித்து ஆட்சேபனைகள் வெளியிடப்படுவதற்கு மற்றுதொரு காரணமாக உள்ளது என்றும் அந்த நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.**

**இவ்விரு அலுவலகங்களும் தற்போது செயலிழந்துள்ளன. மேலும் ஆட்சியாளர்களின் வன்முறைகளை உரிமை மீறல்களை தொடர்ந்தும் ஆட்சியாளர்கள் நிராகரிப்பதும் 2017ஆம் ஆண்டு கலந்தாலோசனை செயலணியில் தெரிவிக்கப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்தாமையும் உலக நாடுகளின் பங்களிப்பும் கண்காணிப்பும் இன்றிய ஒரு பொறிமுறையைத் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்வதற்குத் தாயராக இல்லை என்பது உறுதி. எனவே இலங்கை அரசு உலகை ஏமாற்றும் உண்மை அறியும் ஆணைக்குழு நாடகத்தை உடன் நிறுத்திவிட்டு, பன்னாட்டு விசாரணை ஒன்றுக்குத் தயாராகவேண்டும்.**

# பிள்ளையார் பிடிக்கப்போய்

என். சத்தியமூர்த்தி

தமிழர்களை மீண்டும் ஏறி மிதித்தால், முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்சாவிற்கு



ஏற்பட்ட கதியே தற்போதைய அதிபர் ரணில் விக்கிரமசிங்கேவிற்கும் ஏற்படும். இவ்வாறு கூறியிருப்பவர் தமிழர்களின் தற்போதைய பெருந்தலைவர் என்று கருதப்படும் சம்மந்தன்.

இனப்போர் அவலத்தின் வருடாந்த நினைவுகூறல் குறித்த தனது அறிக்கையிலேயே சம்மந்தன் இவ்வாறு கூறியிருக்கிறார். இந்த அரசும், தமிழர்களையும், அவர்கள் உணர்வுகளையும், உரிமைகளையும் பறிக்கிறது என்பது உண்மை. ஆனால், அதற்காக கோட்டாவின் அரசியல் முடிவே, ரணிலையும் எதிர்நோக்கி உள்ளது என்று கூறுவது, அபத்தமான வாதம். இல்லையென்றால், அப்பட்டமான பொய்.

அது மட்டுமல்ல. இதன் மூலம் தென்னிலங்கை, சிங்கள-பௌத்த பேரினவாதிகள் மத்தியில், ரணிலை, கோட்டா அளவிற்கு உயர்த்திய புண்ணியத்தை, சம்மந்தன் சம்பாதித்துள்ளார் என்றே கருதவேண்டும். இது அவர் எதிர்பாராத ஒரு விளைவாகக்கூட இருக்கலாம். பிள்ளையார் பிடிக்க போய், ஏதோ ஆனது என்பார்களே. அது போல.

### அரசியல் வகிபாகம்

சம்மந்தனைப்பொறுத்தவரையில், வருடத்திற்கு இரண்டு, மூன்று முறை இது போன்ற அறிக்கைகளை வெளியிட்டு தனது அரசியல் வகிபாகத்தை அறவிட்டு விடுகிறார் என்ற எண்ணம் உள்ளது. ஒரு வகையில் அது உண்மையும்கூட.

தனது தள்ளாத வயதிலும், அதுவும் குறிப்பாக, உடல் நலன் அவருடைய மன நலத்துடன் ஒத்துழைக்காத காலகட்டத்தில்கூட சம்மந்தன் இனப்பிரச்சினை குறித்து மட்டுமே தொடர்ந்து சிந்தித்து வருகிறார் என்பது உண்மை. ஆனால், அதற்கு இது போன்ற அடித்து சொல்லும், இடித்து சொல்லும் அறிக்கைகள் அல்ல தற்போதைய தேவை.

மாறாக, தற்போதைய காலகட்டத்தில், சின்னாபின்னமாக ஆகிவிட்ட தமிழ் சமூக-அரசியல் அமைப்புகளிடையே ஒருவித இணக்கப்பாட்டைக்கொண்டு வருவதற்கு அவர் முயற்சிக்க வேண்டும். அந்த முயற்சியை அவர் தனது கொழும்பு இல்லத்தில் இருந்துகொண்டே முன்னெடுக்கலாம்.

இதன் ஒருபடியாக, சம்மந்தன், பல்வேறு தமிழர் தலைவர்களையும் தனது இல்லத்திலேயே சந்தித்துப் பேசலாம். அவர்களுடன் தனி நபர்களாகவும் குழுக்களாகவும் பேச்சு நடத்தலாம். பிறிதொரு காலத்தில் அவர்கள் அனைவரையுமேகூட அழைத்துப் பேசும் நிலைமை உருவாகலாம். அதற்கான உரிமையும் கடமையும் அவருக்கு உண்டு.

### அசைக்க முடியாத ஆளுமை

சம்மந்தன், தனது அசைக்க முடியாத ஆளுமையால், இனப்போருக்கு பிந்தைய காலகட்டத்தில். தமிழர்களின் தலைவராக உருவெடுத்தார். அவரைப் பிரபாகரனுடன் ஒப்பிட்டு பார்க்க முடியாது. பார்க்கவும்கூடாது. ஏன், பிரபாகரன் கோலோச்சிய காலகட்டத்திலும், ஆனந்த சங்கரி, கஜேந்திர குமார் பொன்னம்பலம் போன்ற தலைவர்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக, தங்களது தனித்துத்தை நிலைநாட்டி வந்திருக்கிறார்கள். ஆனால், சம்மந்தன் அழைக்கிறார் என்பதற்காக எந்தவொரு அரசியல் தலைவரும் தற்போது அசைந்து கொடுக்கப் போவதில்லை. அவருடைய தமிழ் அரசு கட்சியிலேயே நிலைமை அதுதான். இல்லை என்றால், அந்த கட்சியின் சரித்திரத்தில் முதல் முறையாக தலைமை பதவிக்கு தேர்தல் நடந்திருக்காது.

கட்சி உடைந்துவிடும் என்று தெரிந்தும் அந்த தேர்தலை யாரும் தடுத்து நிறுத்தி, சமதான பேச்சு மூலம் ஒரு தலைவரை ஒருமனதாக தேர்ந்தெடுத்திருக்கவேண்டும். இந்த முயற்சியைச் செய்யாத குற்றம் குறிப்பாக, பெருந்தலைவர் என்ற அடைமொழிக்கு பாத்தியப்பட்ட சம்மந்தனையே சாரும்.

### ஆளாளுக்கு அவதாரம்

இன்றும், தமிழ் அரசு கட்சியின் உட்பூசலை பேசி தீர்த்து வைப்பதற்குச் சம்மந்தனை விட்டால் ஆளில்லை. ஆனால், அவருடைய ஆளுமை கேள்விக்குறியாகிவிட்டது. அல்லது, இல்லாததாகிவிட்டது. அவரது சுகவீனத்தை பயன்படுத்தி, ஆளாளுக்கு அவதாரம் எடுத்து விட்டனர். இனி அவர்களை கட்டுகோப்பில் கொண்டுவருவது முடியாத காரியம் என்றே தோன்றுகிறது.

அதைவிட முக்கியம். சம்மந்தனையே மதிக்காத ஆளுமைகள், தமிழர் தரப்பில் பிறிதொரு பிரகஸ்பதியையா ஏற்றுக்கொள்ள போகிறார்கள்? மேலும், தற்போதைய போட்டியாளர்கள் மதித்து ஏற்றுக்கொள்ளும் மத்தியஸ்தர்கள்தான், தமிழ்ச் சமூகத்தில் இன்று இருக்கிறார்களா?

அவ்வாறான அறிவாளிகள் இன்றும் இருக்கலாம். ஆனால், அவர்கள் அனைவருமே புலம்பெயர்ந்தவர்கள். நாட்டுநடப்பு அறியாமல், 'ஓடிப்போனவன்' என்ற தங்களது குற்ற உணர்வுக்கு உள்நாட்டில் அரசியல் வடிகால் தேடுபவர்கள். மாறாக, தங்களது அறிவு மற்றும் பொருள் வசதியால், இங்குள்ள சமூகத்தவர்களை உள் நாட்டிலேயே கரையேற்றுவதற்கு முயலாதவர்கள்.

இந்தப் பின்னணியில், அனைத்துத் தமிழ்த் தலைமைகளையும் ஒன்றுபடுத்த முடியும் என்ற எண்ணம் நிறைவேறாது. கரையேறாது. இந்த நிலை மாறாவிட்டால், தமிழரின் இன அரசியலுக்கு எதிர்காலம் இல்லை என்பதே உண்மை. ஆனால், அந்த உண்மையைக்கூட இன்றைய தலைவர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

ஏன், அந்தத் தலைவர்கள் இது போன்ற காசு பெறா விடயங்களை சிந்தித்துக்கூடப் பார்க்க மாட்டார்கள். அவ்வாறு அவர்கள் சிந்தித்து செயல்பட்டால்தான், பிரச்சினைகளுக்கு முடிவு வந்து விடுமே! அதன் பின்னர், அவர்கள் எதனை வைத்து அரசியல் செய்வது? இது, தனித்துவ அரசியல் செய்யும் கஜன் பொன்னம்பலம் போன்றோருக்கும் பொருந்தும்.

### தொட்டும் தொடாமல்

எதிர்காலம் என்ன சொல்கிறது என்று இவர்கள் அனைவருமே கூர்ந்து கவனிக்கவேண்டும். சிந்திக்கவேண்டும். தேர்தல், அதற்கான அளவு கோல் என்று கூறலாம். அதிலும் குறிப்பாக விருப்பு வாக்கு அடிப்படையிலான நாடாளுமன்றத் தேர்தல் ஒவ்வொரு முறையும் ஒரு செய்தியைக் கூறுகிறது.

அந்த வகையில், தமிழ் வாக்காளர்கள், மாவை சேனாதிராஜா, சுரேஷ் பிரேமசந்திரன் போன்றோரை

தொடர்ச்சி 5ம் பக்கம்..........

# பிள்ளையார் பிடிக்கப்போய்...

ஏறக்கட்டி கனகாலம் ஆகிவிட்டது. கிழக்கில் சம்மந்தனும், வடக்கே சுமந்திரன், டக்ளஸ் தேவானந்தா போன்றோரும் தங்களது நாடாளுமன்ற ஆசனங்களைக்கூடத் தொட்டும் தொடாமலும்தான் கடந்த முறை வென்றெடுத்தார்கள்.

இன்னும் சொல்லப்போனால், நாட்டிலேயே சுதந்திர கட்சியின் சின்னத்தில் வடக்கில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரே நாடாளுமன்ற உறுப்பினரான அங்கஜன் ராமநாதன் அளவிற்கு தமிழ் தேசியம் பேசும் யாரும் வாக்குகளை அள்ளி எடுத்துவிடவில்லை. இதில், டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈபிடிபி-ன் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள், கிழக்கே பிள்ளையான் போன்றோரின் தேர்தல் வெற்றியும் தமிழ் தேசியம் கூறி அரசியல் செய்வோரை எள்ளி நகையாடுகின்றன.

தமிழ் தேசியம் பேசும் அரசியல் கட்சிகள் மற்றும் அரசியல்வாதிகளின் ஆளுமை குறைந்து வருகிறது என்பது சுவரில் எழுதிய சித்திரமாக வெளிப்படையாகத் தெரிகிறது. இனப்போர் முடிவுற்ற காலகட்டம் தொடங்கி, வாக்குரிமை பெற்ற இளைய சமூகத்தினர், ஒரு விதத்தில், தங்களது சமகால சமூக-அரசியல் தலைமைகளைப் பார்த்து வேதனை அடைகிறார்கள், கோபமுறுகிறார்கள். மற்றொரு விதத்தில், வெட்கித் தலை குனிகிறார்கள்.

ஆனால், இளைய தலைமுறையினரிடையே இருந்து சொல்லிக்கொள்ளும் வகையில் எந்தவொரு தலைவரும் தோன்றிவிடவில்லை. அவர்களில் எத்தனை பேருக்கு சமூக அக்கறை இருக்கிறது? எத்தனை பேருக்கு அரசியலில் ஆர்வம் இருக்கிறது? இது குறித்தும் யாரும் கவலைப்படுவதாகத் தெரியவில்லை.

தற்போதைய தமிழ் அரசியல் தலைமைகளை பொறுத்தவரையில், தங்களுடன் இருக்கும் அடுத்த தலைமுறையினரை வெறும் எடுபிடிகளாக மட்டுமே பார்க்கிறார்கள். அவ்வாறே நடத்தவும் செய்கிறார்கள். தங்கள் காலத்திலேயே. அவர்களில் ஒரு சிலரையாவது, இரண்டாவது, மூன்றாவது இடங்களுக்கு அறிமுகப்படுத்தி, அவர்களைக் கட்சி தொண்டர்கள் ஏற்றுக்கொள்ள வகை செய்வதில் இந்த தலைவர்களுக்கு விருப்பம் இல்லை. எங்கே, வளர்த்த கடா மார்பில் பாய்ந்துவிடுமோ, என்ற அச்சம்.

## வெளியாட்கள்

இது இப்படி என்றால், தமிழ் அரசு கட்சி போன்ற ஓர் அரசியல் ஆளுமை நிறைந்த அமைப்பில், சம்மந்தன், உள்ளூரில் தனக்கு தலையாட்டுபவர்களாக மட்டுமே வட மாகாணத்தில் உள்ளவர்கள் இருக்கவேண்டும் என்பதில் தெளிவாக இருந்தார். அதற்காகவே முதலில் சுமந்திரன் பின்னர் விக்னேஸ்வரன் ஆகிய இருவரையும் வளர்த்து விட்டார்.

அவரில், முதலாமவர், வட மாகாண அரசியலில், பழம் தின்று கொட்டை போட்ட தலைவர்களுக்கு ஏற்புடையவராக இருக்க மாட்டார், இரண்டாமவர், சம்மந்தனை எதிர்த்தே அரசியல் செய்வார் என்பதும் அவருக்கே தெரிந்த விடயம். அல்லது, அவரிடம் கூறப்பட்ட விடயம். பின்னர் அதுவே நடந்தது.

தமிழ் அரசியல் பரப்பிலோ, அவர்கள் இருவருமே கொழும்பில் குடிகொண்ட 'வெளியாட்கள்' என்பது போன்ற ஒரு பிம்பம் உருவாக்கப்பட்டது. இது போதாது என்று, அவர்கள் இருவருமே இனப்போர் காலகட்டத்தில், தமிழர் அரசியலில், அதிலும் குறிப்பாக போராளி குழுக்களில் இணைந்து செயல்படாதவர்கள் என்பதையும் ஒரு கறுப்பு புள்ளியாக சிலர் குறியீடு செய்தனர்.

அவர்களில் பலரும், விடுதலைப் புலிகள் அமைப்பால் சின்னாபின்னப்படுத்தப்பட்டு, பின்னர் அவர்களுக்கு ஒத்து ஊதியவர்கள். ஆனால், அவர்களே. விடுதலை புலிகள் அமைப்பை எதிர்த்து மிதவாத அரசியல் செய்த சங்கரியை ஏற்றுக்கொள்ளாதவர்கள். அந்த அமைப்பை எதிர்த்துத் துப்பாக்கி ஏந்திய தேவானந்தாவையும், பிற்காலத்தில் கருணாவையும், தற்போதும் பிள்ளையானையும் எதிரிகளாகவே கருதி அரசியல் செய்து வருபவர்கள்.

## களத்தில் குதிக்கலாம்

இந்தப் பின்னணியில், சாணக்கியன் போன்ற ஓர் இளைஞர் தன்னை வெளிப்படுத்திக்கொண்டது வரவேற்கப்பட வேண்டிய விடயம். ஆனால், அவர் கிழக்கில் உதித்ததால், வடக்கு வாழ் தமிழர்களுக்கு இரண்டாம் பட்சமே. அதிலும் குறிப்பாக, அவர் இனப்போர் காலகட்டத்தில் ஆளும் ராஜபக்ச தலைமையின் கீழ் அரசியல் பணி ஆற்றியதால், தமிழ்த் தேசியம் குறித்துப் பேசுவதற்குத் தகுதி இல்லாதவர் என்றும் முத்திரை குத்தப்பட்டவர். என்றாலும், மட்டகளப்பு வாக்காளர்களால், ஏற்றுக்கொள்ளப்பட்டு, சாணக்கியன், நாடாளுமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும், சிறந்த பேச்சாளராக உருவாகி உள்ளார். 'பொத்துவில் முதல் பொலிகண்டி வரை' என்ற பேரணிக்கு வடிவம் கொடுத்ததில் ஒருவர். ஆனால், அந்தப் பேரணி, வடக்கு மாகணத்தில் பிரவேசித்ததில் இருந்து தாக்குதல்களுக்கு உள்ளானவரும்கூட.

அந்தத் தலைமுறையை சார்ந்த மற்றவர்கள் இல்லை என்றாலும், சாணக்கியன் எதிர்கால தமிழர் தலைவராக உருவெடுப்பாரா? அவரது தாய் -தந்தையர், தமிழர் மற்றும் சிங்களவர் என்பது குறித்த அரசியல் ஒருபுறம் இருக்க, சாணக்கியனிடம் தலைமைத்துவ குணங்கள் இருக்கிறதா, என்பது இன்னமும் தெளிவாகவில்லை.

சிறந்த மேடைப் பேச்சாளராக இருப்பது ஒன்று. நாடாளுமன்ற விவாதங்களில் அடுத்தவர்களை தன்னுடைய வாத திறமையினால், அடித்து தூக்குவது மற்றொன்று. பேரணிகளை சிறப்பாக ஏற்பாடு செய்வது பிறிதொன்று. ஆனால், தலைமைத்துவம் என்பது இவை அனைத்திற்கும் அப்பால் இனம் புரியாத ஏதோ விடயத்தில் தொங்கி இருப்பது. அதனை அறிந்து, புரிந்து கொண்டு, அந்த மாண்புகளையும் ஏற்புடைமைகளையும் வளர்த்துக்கொள்வதேதலைமைத்துவத்தைஅடைவதற்கான வழி.

இதில், உதாரணத்திற்கு, தமிழ் அரசு கட்சியின் தலைவர் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்று சிறீதரனும் தோல்வி அடைந்த சுமந்திரனும் ஒரு சில குணாதிசயங்களை மட்டுமே பெற்றிருந்தார்கள். அவர்களுக்கு அப்பால், தமிழ் அரசியல் தலைவர்கள் எவருவே இதில் பெரும்பாலான தகுதிகள்




இல்லாமலே, குண்டுசட்டிக்குள் குதிரை ஓட்டிவந்துள்ளார்கள். ஆனால், இவற்றில் பல குணாதிசங்களையும் பெற்ற ஒரு தலைவரே தமிழ் மக்களின் சமகால தேவை. அவ்வாறான தகுதிகள் இருப்பவர்கள், களத்தில் குதிக்காலம்தானே!




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# மட்டு அம்பாறை மாவட்டங்களின் செயலாளர்கள் கலந்துரையாடல்





(பாறுக் ஷிஹான்)

மட்டக்களப்பு அம்பாறை ஆகிய இருமாவட்டங்களிலும் நீண்ட காலமாக நிலவிவருகின்ற எல்லைப் பிரச்சினைகளை சுமுகமாக தீர்க்கும் வகையில் விசேட கலந்துரையாடல் காரைதீவு பிரதேச செயலகத்தில் நேற்று(புதன்கிழமை) இடம்பெற்றது.







குறித்த விசேட கலந்துரையாடலில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் மற்றும் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்கிரம ஆகியோரின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்றது.

இதன்போது இவ்விரு மாவட்டங்களுக்கிடையில் காணப்படும் எல்லைப் பிரச்சினைகள் மற்றும் காணி பிணக்குகள் தொடர்பாக பல்வேறு விடயங்கள் இவ்விசேட கலந்துரையாடலில் ஆராயப்பட்டன.

இக் கலந்துரையாடலின் போது மயிலத்தமடு மாதவனை, உகண-வெல்லாவெளி, உகண-நாவிதன்வெளி, களுவாஞ்சிக்குடி-கல்முனை, பிரதேச எல்லைப் பிரச்சினைகள் கால்நடையாளர்களின் மேய்ச்சல்தரை மற்றும் காணி பிரச்சினைகள் தொடர்பாகவும் சுமுகமாக கலந்துரையாடி அவற்றை தீர்ப்பதற்கான ஆலோசனைகள் அரசாங்க அதிபர்களால் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டன.

மேலும் எல்லை பிரதேசத்தில் அடாத்தாக காணிகளை பிடித்தல் சட்டவிரோத காணி பயிர்ச்செய்கை நிறுத்துதல் வீதிகள் அமைத்தல் காட்டு யானை பிரச்சினைகள் தொடர்பிலும் ஆராயப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

குறித்த இக்கலந்துரையாடலில் மகாவலி அதிகார சபையினரால் மாவட்டத்தில் மேற்கொள்ளவுள்ள செயற்திட்டங்கள் தொடர்பாக இதன் போது அறிக்கை செய்யப்பட்டது.

இக் கலந்துரையாடலில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி.ஜெகதீசன் , மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்களான திருமதி சுதர்ஷினி ஸ்ரீகாந், திருமதி . நவரூபரஞ்சினி முகுந்தன் (காணி), பிரதேச செயலாளர்கள், மகாவலி அதிகார சபையினர், காணி உத்தியோகத்தர்கள், துறைசார் உயர் அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.(05)

# தியத்தலாவை கார்பந்தய விபத்தில் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற சிறுமி சாவு

தியத்தலாவை, நரியாகந்த பிரதேசத்தில் இடம்பெற்ற கார் பந்தய போட்டியின் போது ஏற்பட்ட விபத்தில் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த 16 வயது சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார் என தியத்தலாவை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தியத்தலாவை,ஹெலகெதர பிரதேசத்தைச் சேர்ந்த 16 வயது சிறுமியொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி தியத்தலாவை,நரியாகந்த பிரதேசத்தில் இடம்பெற்ற கார் பந்தய போட்டியின் போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன்போது, போட்டியில் பங்குபற்றிய இரண்டு கார்கள் ஒன்றுடன் ஒன்று மோதியதில் ஒரு கார் பந்தய திடலை விட்டுவிலகி அங்கிருந்த பார்வையாளர்கள் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது 7 பேர் உயிரிழந்துள்ளதுடன் 21 பேர் படுகாயமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் பதுளை போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

(05)

# பாலத்தை உடைத்துக்கொண்டு விழுமோ தெரியாது நடுஊற்று மக்களின் எதிர்கொள்ளும் அவலநிலை



(எச் எம் ஹலால்தீன்)

கிண்ணியா - நடுஊற்று கிராமத்திலிருந்து கந்தகாடு கிராமம் வரை செல்லும் வீதி உடைந்து காணப்படுகின்றது

கந்தகாடு மகாவலி ஆற்றிலிருந்து மணல் ஏற்றிச்செல்லும் டிப்பர் வாகனங்கள் இந்த வீதியூடாக பயணிக்கின்றன.

சுமார் 5 கிலோமீற்றர் வரையான இந்த வீதி குன்றும் குழியுமாக காணப்படுகின்றது. இதுதவிர கிராமத்திற்கு செல்லக்கூடிய பாலமொன்றும் முற்றாக சேதமடைந்த நிலையில் உள்ளது.

ஆகவே, தமது பயன்பாட்டிற்கு உகந்த வகையில் குறித்த பாலம் மற்றும் வீதியை சீரமைத்து தருமாறு பிரதேச மக்கள் உரிய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கின்றனர்.(05)


முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்















4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557

காலைக்கதிர் Kalaikkathir

## அமெ....

(இரண்டாம்பக்கத் தொடர்ச்சி)

எதிரான வன்முறை அத்துமிறல்கள் மீண்டும் நிகழாமல் இருப்பதற்கு போதுமான நடவடிக்கைகளை எடுக்கவும் இல்லை.

அவ்வாறு இருக்கையில் தென்சூடான், மொன்ரிநீக்ரோ, கிழக்கு திமோர், பொஸ்னியா, எதிர்த்திரியா மற்றும் கொசோவா போன்ற நாடுகளில் ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஏனைய நாடுகளின் ஆதரவுடன் மக்கள் தமது சுயநிர்ணய உரிமையை சுதந்திரத்திற்கான வாக்கெடுப்புகள் ஊடாகப் பயன்படுத்தியதன் மூலம் இதேபோன்றமோதல்கள் ஜனநாயக ரீதியாகவும் அமைதியாகவும் சட்டபூர்வமானதாகவும் வெற்றிக ரமாகவும் தீர்க்கப்பட்டுள்ளன.

ஆகவே இப்போது பிரதிநிதிகள் சபையால் நிறைவேற்றப்படும் இந்தத் தீர்மானம்,

- ஈழத் தமிழர்களுடனான ராஜதந்திர வழிமுறைகளை வலுப்படுத்துமாறும் இந்துபசிபிக்கின் தெற்காசிய பிராந்தியத்தின் அமைதி மற்றும் உறுதித் தன்மைக்காக அவர்களுடன் இணைந்து செயலாற்றுமாறும் ஐக்கிய அமெரிக்காவை வேண்டுகிறது.
- ஈழதமிழ் மக்களின் அரசியல் உரிமைகளைப் பாதுகாக்கவும் உரிமைகளுக்காக வாதிடவும் உலகளாவிய வகையில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள செயல்முறை யான சுதந்திரத்திற்கான பொதுவாக் கெடுப்பு மூலம் அவர்கள் ஜனநாயக வழியிலும் அமைதியாகவும் அவர்களின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் அவர்கள் ஏற்றுக்கொள்ளும் நிரந்தரமான அரசியல் தீர்வை அடைவதற்காக உழைக்கவும் ஐக்கிய அமெரிக்காவையும் சர்வதேச சமூகத்தையும் வேண்டுகிறது.
- ஈழத் தமிழ் மக்களுக்கு எதிராக இலங்கை நடத்தியது இன அழிப்பு என ஏற்றுக் கொள்கின்றது.

இவ்வாறு அத்தீர்மானவரைவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## உண்மை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சிவில் சமூகத்தினருக்கு ஆதரவை வெளியிடும் வகையில் போரினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சிவில் சமூகத்தினர் வெளியிட்டுள்ள, முன்வைத்துள்ள வேண்டுகோள்களை செவிமடுத்து ஆராய வேண்டும்.

எந்த உள்நாட்டு உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவிலும் சர்வதேச பங்களிப்பு காணப்படவேண்டும் என்ற பாதிக்கப்பட்டவர்களின் வேண்டுகோளை ஆளும்தரப்புத் தீவிரமாக ஆராயவேண்டும். உள்நாட்டு பொறிமுறை மூலம் மாத்திரம் உண்மையைநிலைநாட்ட முடியாது என்பதே பரந்துபட்ட நம்பிக்கையாகவுள்ளது

இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்டவர்களிற்கு உண்மை மற்றும் நீதியை உறுதி செய்வதற்காக ஐக்கிய நாடுகளின் உண்மையை கண்டறியும் செயற்பாடுகளுடன் இலங்கை இணைந்து செயற்படவேண்டும். இந்த உண்மை ஐக்கிய மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை பாதிக்கப்பட்டோர் எதிர்ப்பதால், நிலைமாற்றுக்கால நீதி விடயத்தில் அனுபவம் உள்ள வெளிநாட்டு அரசுகள் இலங்கை அரசின் முயற்சிகளிற்கு உதவக்கூடாது.

உண்மைநல்லிணக்கம்ஐக்கியம் தொடர்பான ஆணைக்குழுவை அமைப்பதற்கான இலங்கை அரசின் முயற்சிகள் குறித்துப் பல கரிசனைகள் காணப்படுகின்றன.

இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு,கிழக்கின் மக்களும் சிவில் சமூகத்தினரும் உத்தேச உண்மை, நல்லிணக்கம் ஐக்கியம்தொடர்பான ஆணைக்குழு குறித்து பல தடவை எதிர்ப்புக்களை வெளியிட்டுள்ளனர்.

உத்தேச ஆணைக்குழுவின் இடைக்கால செயலகத்தின் பணிப்பாளர்நாயகத்திற்கு மே 7ஆம் திகதி எழுதிய கடிதத்தில் இறுதியாக பல அமைப்புகளும் தனிநபர்களும் எங்கள் ஆட்சேபனையை வெளிப்படுத்தியிருந்தனர்.

நீதியை வழங்குவதில் மிகமோசமான விதத்தில் செயற்பட்டுள்ள தோல்வியடைந்துள்ள பல ஆணைக்குழுக்கள் காரணமாக ஏற்பட்டுள்ளநம்பிக்கையின்மையும் அத்துடன் சர்வதேச மனித உரிமைச் சட்டங்கள் மற்றும் நிலைமாற்றுகால நீதி நியமங்களின் கீழ் தனக்குள்ள கடப்பாடுகளை நிறைவேற்றுவதில்தற்போதையஅரச தலைமைத்துவத்தின்செயற்பாடுகள் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் விதத்தில் காணப்படாமையும் ஆட்சேபனையைவெளியிடுவதற்கு காரணமாக உள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானம் குறித்த இலங்கையின் அர்ப்பணிப்பின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலகம் இழப்பீடுகளிற்கான அலுவலகம் ஆகியவற்றின் மீதான நம்பிக்கையின்மையும் உண்மை ஐக்கியம்நல்லிணக்கஆணைக்குழு குறித்து ஆட்சேபணைகள் வெளியிடப்படுவதற்கு மற்றுதொரு காரணமாக உள்ளது.

இவ்விரு அலுவலகங்களும் தற்போதுசெயலிழந்துள்ளன. மேலும் ஆட்சியாளர்களின்வன்முறைகளை உரிமை மீறல்களை தொடர்ந்தும் ஆட்சியாளர்கள் நிராகரிப்பதும் 2017ஆம் ஆண்டு கலந்தாலோசனை செயலணியில் தெரிவிக்கப்பட்ட விடயங்களை நடைமுறைப் படுத்தாமையும்காரணமாகஉள்ளது.

இவ்வாறானஆணைக்குழுவை ஏற்படுத்த முயலும் ஆளும் தரப்பு கடந்தகால மனித உரிமை துஸ்பிரயோகங்கள் குறித்து தீவிர விசாரணையை முன்னெடுப்பதற்கான தனது உறுதிப்பாட்டை வெளிப்படுத்தவேண்டும்.

காணாமல்போனோர் அலுவலகம்மூலம்பாதிக்கப்பட்டோர் மத்தியில்நம்பிக்கையைவளர்க்கும் அதேவேளை ஒன்றுகூடுவதற்கான ஆர்ப்பாட்டங்களில்ஈடுபடுவதற்கான அவர்களின் உரிமையை அங்கீகரிப்பதன்மூலமும்கலந்தாலோசனைகளில் ஈடுபடுவதன் மூலமும் இதனைச் செய்வதற்கான வாய்ப்பு ஆளும்தரப்புக்குக் கிடைத்தது எனினும் ஆளும் தரப்பு இதனை நிறைவேற்றத்தவறிவிட்டது - என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## சம்பூர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வந்து பதினைந்து ஆண்டுகள் கடந்தும், உள்நாட்டுப் போரினால் ஏற்பட்ட கூட்டு வலி மற்றும் அதிர்ச்சியில் இருந்து தமிழ் மக்கள் இன்னமும் முழுமையாக மீளவில்லை.

முள்ளிவாய்க்காலில் ஆயிரக் கணக்கான தமிழர்கள் கொல்லப் பட்டமையுடன் போர் முடிவுக்கு வந்தது. மேலும், ஆயிரக்க ணக்கானோர் இந்தப் போரில் காயமடைந்தனர். பலர் வலுக்கட்டாயமாகக் காணாமல் ஆக்கப்பட்டனர். அவர்கள் எங்கு இருக்கிறார்கள் என்பது இன்னமும் தெரியவில்லை.

தமிழ் மக்கள் இந்த இறுதிப்போரின்போதுசந்தித்தபெரும் பொருள் இழப்பின் தாக்கமானது நீண்ட கால விளைவுகளைக் கொண்டது. உள்நாட்டுப் போரின்போது தாங்கள் சந்தித்த மனித, உடல் மற்றும் பொருள் ரீதியானஇழப்புகள்குறித்துஉண்மையையும் நீதியையும் தமிழ் மக்கள் இன்று கோரி நிற்கின்ற அதேவேளை, போரின் கடைசிக் கட்டங்களின்போது இலங்கை அரசு செய்த அட்டூழியங்களை ஓர் இன அழிப்புச் செயன்முறை என அவர்கள் கருதுகிறார்கள்.

கடந்தபதினான்கு ஆண்டுகளில் நடந்ததைப் போலவே, இந்த ஆண்டிலும் மே மாதத்திலே வடக்கு, கிழக்கிலும் அதற்கு அப்பாலும் உள்ள தமிழர்கள் போரின்போது இறந்தவர்களை நினைவுகூருகின்றனர்.

தொடர்ச்சி 9ம் பக்கம்....

# முள்ளிவாய்க்கால் நினைவு தாங்கிய ஊர்தி வவுனியாவில் வலம் வந்தது

## மக்கள் திரண்டு கண்ணீர் மல்க அஞ்சலி



முள்ளிவாய்க்கால்இனப்படுகொலைநினைவுதாங்கிய ஊர்தி நேற்று (வியாழக்கிழமை) வவுனியாவிற்கு வருகை தந்த நிலையில் மக்கள் திரண்டு கண்ணீர் மல்க மலர்தூபி அஞ்சலி செலுத்தினர்.

தமிழ் தேசிய மக்கள் முன்னனியின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் இருந்து ஆரம்பமாகிய முள்ளியவாய்கால் பேரவலத்தின் சாட்சியங்களை தாங்கிய ஊர்தி, வடக்கு மாகாணத்தின் அனைத்து மாவட்டங்களுக்கு பயணித்து எதிர்வரும் 18 ஆம் திகதி முள்ளிவாய்கால்நினைவுதிடலைசென்றடையவுள்ளது.

இந்நிலையில் வவுனியாவிற்கு வருகை தந்த ஊர்த்திக்கு தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினர் தீபம், ஏற்றியும் மலர் தூபியும் அஞ்சலி செலுத்தினர். இதன்போது தாய்மார் கண்ணீர் மல்ல அஞ்சலி செலுத்தியதுடன் வீதியால் சென்ற பலரும் அஞ்சலி செலுத்தினர்.

தமிழினப் படுகொலைக்கு சர்வதேச குற்றவியல் விசாரணை வேண்டும், தேசம் - சுயநிர்ணம் -









இறைமைஅங்கீகரிக்கப்பட்டசமஸ்டிவேண்டும் என்னும் வாசங்களைத் தாங்கியவாறும், போரின் வடுக்களை சுமந்த படங்களை தாங்கியவாறும் குறித்த ஊர்தி பவனி வந்தது.

தொடர்ந்து பொங்கு தமிழ் நினைவு தூபி, பண்டாரவன்னியன் சதுக்கம், பசார் வீதி, குருமன்காடு, தாண்டிக்குளம், தரணிக்குளம், ஈச்சங்குளம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்கும் ஊர்தி சென்ற நிலையில் அங்கு மக்கள் திரண்டு அஞ்சலி செலுத்தியிருந்தனர். (05-100)

காலைக்கதிர் Kalaikkathir

## சம்பூர்....

(எட்டாம்பக்கத் தொடர்ச்சி)

வடக்கு, கிழக்கு முழுவதும் நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. முள்ளிவாய்க்கால் வன்முறையை நேரில் அனுபவித்தவர்கள் உள்ளடங்கலாக தமிழ்சமூகத்தைச் சேர்ந்தவர்களால் இந்த நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன.

போரில் இறந்த தங்கள் உறவுகளையும், இழப்புக்களையும் சந்தித்த பரந்துபட்ட தமிழ்சமூகத்தை நினைவுகூரும் அனைவருடனும், யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தோளோடு தோள் நின்று அவர்களுக்கு எமது ஆதரவினை வழங்குகிறோம். அவர்களின் துயரத்திலும் வேதனையிலும் நாமும் பங்கேற்கிறோம்.

நினைவுகூரலானது போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்குக் குணப்படுத்தலினை ஏற்படுத்துவதிலும், அவர்கள் வாழ்விலே அமைதியைக் கொண்டுவருவதிலும் பங்களிக்கக் கூடியனவாக இருக்கும் அதேவேளை, பாதிக்கப்பட்டவர்களின் தனிப்பட்ட மற்றும் கூட்டு எதிர்ப்பினையும், வன்முறைக்குப் பின்னான அம்மக்களின் மீளெழுச்சியினையும் வெளிப்படுத்தும் செயன்முறைகளாகவும் அமைகின்றன என யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் கருதுகிறது.

அதேவேளை, இலங்கை அரசு மற்றும் அதன் சட்ட அமுலாக்க இயந்திரங்கள் இந்த வாரம் நடைபெற்று வரும் நினைவேந்தல் நிகழ்வுகளைக் கட்டுப்படுத்துவது, அடக்குவது மற்றும் தடுப்பது குறித்துத் தனது ஆழ்ந்த கரிசனையினையும், கவலையினையும் ஆசிரியர் சங்கம் இந்த அறிக்கையூடாக வெளிப்படுத்துகிறது.

2009ஆம் ஆண்டிலே முள்ளிவாய்க்காலிலே போரிலே அகப்பட்டிருந்த மக்களின் அனுபவங்களை நினைவுகூரும் வகையில், திருகோணமலை மாவட்டத்தின் சம்பூரிலே முள்ளிவாய்க்கால் கஞ்சியை விநியோகித்தவர்கள் கைது செய்யப்பட்டமையை எமது சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது.

இதேபோல, மட்டக்களப்பு மாவட்டத்தில் முள்ளிவாய்க்கால் கஞ்சி விநியோகத்தைப் பொலிஸார் தடுக்க முயன்றுள்ளனர். இறந்தவர்களின் நினைவாக ஏற்பாடு செய்யப்பட்ட குருதிக்கொடை முகாம்களை நிறுத்துவதற்கான முயற்சிகளும்கூட இடம்பெற்றிருக்கின்றன.

கல்முனை பகுதியில் நினைவேந்தல் செயன்முறைகளைத் தடுக்கும் வகையில் நீதிமன்ற உத்தரவினைப் பொலிஸார் பெற்றுள்ளனர். இந்தச் சம்பவங்களைத் தவிர, சமூகக் கூட்டிணைவுடன் முன்னெடுக்கப்படும் இந்த நினைவேந்தல் நிகழ்வுகளை, விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கும், பயங்கரவாதத்துக்கும் புத்துயிர் அளிக்கும் முயற்சிகள் எனத் தவறாக சித்திரித்து, இழிவுபடுத்தும் கொடிய செயலிலும் அரசும் அதன் இயந்திரங்களும் ஈடுபட்டுள்ளன.

நினைவுகூரலினைத் தடுப்பதற்கான அரசின் இந்த முயற்சிகள் அனைத்தும் போரில் இறந்தவர்களை அர்த்தமுள்ள முறையில் நினைவுகூருவதற்கு இலங்கையிலே தமிழர்களுக்கு இடமில்லை என்பதனையே எடுத்துக்காட்டுகின்றன.

அரசின் இவ்வாறான கடும்போக்கான நடவடிக்கைகள் தமிழர்களுக்கு எதிராகத் தொடரும் அரசின் இன விரோதத்தையும் வெளிக்காட்டுகின்றன. பல தசாப்தங்களாகத் தமிழ் மக்கள் அனுபவித்த இன ஒடுக்குமுறை மற்றும் இன வன்முறைக்கு இலங்கை அரசின் சட்ட மற்றும் நீதித்துறைக் கட்டமைப்புகளிடம் இருந்து எந்த நீதியையும் பெற முடியாது என்ற தமிழ் சமூகத்தின் நீண்டகாலப் பார்வையினை இந்தச் சம்பவங்கள் மீண்டும் உறுதிப்படுத்துவனவாக அமைகின்றன

தமிழ் சமூகத்தின் நினைவேந்தல் முயற்சிகளை தவறாக சித்திரிக்கும் வகையிலும், அவற்றினை மட்டுப்படுத்தும் வகையிலும், அவற்றினைக் குற்றமாக மாற்றும் வகையிலும் அரச இயந்திரங்களினால் மேற்கொள்ளப்படும் எல்லா செயன்முறைகளையும் உடனடியாக நிறுத்துமாறு இலங்கையில் சட்ட அமுலாக்கத்துக்குப் பொறுப்பான அனைத்துத் தரப்புக்களையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் கோருகிறது.

இலங்கையில் வாழும் மக்கள் அனைவரும் இன, மத வேறுபாடுகள் கடந்து நாட்டின் வடக்கு, கிழக்கிலே நினைவேந்தல் செயன்முறைகளினை நசுக்கும் வகையில் இடம்பெறும் அரச அடக்குமுறையை கண்டித்து, போரின்போது இறந்தவர்களின் குடும்பங்களுக்கும், இந்த வாரம் நினைவேந்தல் நிகழ்வுகளை ஏற்பாடு செய்துகொண்டிருப்போருக்கும் தங்கள் ஆதரவினை வழங்குமாறு நாம் கேட்டுக்கொள்கிறோம்.

போரினால் பாதிக்கப்பட்ட சமூகங்கள் அனுபவித்த வேதனை மற்றும் இழப்புகளுக்கு நீதி கோரி நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்றும் யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் இந்தச் சந்தர்ப்பத்திலே வலியுறுத்துகிறது என்றுள்ளது.

## சனிக்கிழமை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்வமத தலைவர்கள் உள்ளிட்ட பொதுமக்கள் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பொருளாதார....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த ஞாயிற்றுக்கிழமை விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டு ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளார்.

அரச நிறுவனங்களைத் தனியார் மயப்படுத்துவதை எதிர்த்து மஹிந்த ராஜபக்ச அறிக்கை வெளியிட்டு 72 மணித்தியாலங்களுக்குள் அதற்குப் பதிலளிக்கும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்றுக்காண்டுள்ள இணக்கப்பாட்டுக்கு அமைய மறுசீரமைப்பு என்ற பெயரில் அரச நிறுவனங்களைத் தனியார் மயப்படுத்துவதற்கு உரிய ஒப்பந்தத்தைச் சட்டமாக்குவதற்காக 'பொருளாதார மறுசீரமைப்பு சட்டமூலத்தை' மே 13 இடம்பெற்ற அமைச்சரவையில் சமர்ப்பித்து அனுமதி பெற்றுக்கொண்டுள்ளார். இந்தச் சட்டமூலம் வெகுவிரைவில் நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்படும்.

பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களின் தலைவராகக் கருதப்படும் மஹிந்த ராஜபக்ச தற்போதைய அரச நிர்வாகத்தினால் எந்தளவுக்கு நெருக்கடிக்குள்ளாகப்பட்டுள்ளார் என்பது இதனூடாக வெளிப்படுகிறது. தேசிய வளங்களைத் தனியார் மயப்படுத்தவும், பங்குகளை விற்பனை செய்யவும் ஆளும் தரப்புக்கோ ஜனாதிபதிக்கோ மக்களாணை கிடையாது.

பொது ஜன பெரமுனவின் ஆசீர்வாதத்தில் ஜனாதிபதி பதவிக்கு வந்த தலைவரும், ஆளும் தரப்பும் அக்கட்சியின் தலைவர் மஹிந்த ராஜபக்சவின் ஆலோசனைக்கு எதிராகச் செயற்படுவதைவிட்டு பொது ஜன பெரமுனவின் உறுப்பினர்கள் அனைவரும் வெட்கப்படவேண்டும். அரச நிறுவனங்களைப் பாதுகாப்பதற்காகக் கடிதத்தினூடாக மாத்திரம் எதிர்ப்பை வெளிப்படுத்துவது போதுமானதாக இல்லை என்பதை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச விளங்கிக்கொள்ளவேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்துக்கு அமையச் செயற்படுவதாக ஆளும் தரப்புக் குறிப்பிடுகிறது. ஆனால் சிறந்த யோசனைகளைச் செயற்படுத்துவதில்லை. செயற்திட்டங்கள் வெளிப்படைத் தன்மையான விலை மனுகோரலுடன் இடம்பெற வேண்டும் என நாணய நிதியம் குறிப்பிட்டுள்ளது. ஆனால் வெளிப்படைத்தன்மை என்பதற்கு ஆளும்தரப்பு மதிப்பளிக்கவில்லை. கட்டுநாயக்க விமான நிலையத்தில் விசா விநியோகம் தனியார் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளதை இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகக் குறிப்பிட முடியும்.

பொது ஜன பெரமுனவின் தலைவரைக் கேலிக்கு உள்ளாக்கும் ஆளும் தரப்புடன் ஒன்றிணைந்து எதனைச் சாதிக்கப் போகின்றீர்கள் என்பதைப் பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களிடம் வினவுகிறேன். பொது ஜன பெரமுனவின் ஆசீர்வாதத்தில்தான் சகல முறைகேடுகளையும் ஆளும் தரப்பு முன்னெடுக்கிறது. அரச நிறுவனங்கள் மறுசீரமைப்பு தொடர்பில் மஹிந்த ராஜபக்ச வெளியிட்ட அறிக்கை பொது ஜன பெரமுனவின் நிலைப்பாடு என்றால் பொருளாதார மறுசீரமைப்பு சட்ட மூலத்துக்கு எதிராகப் பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் அனைவரும் வாக்களிக்கவேண்டும் என்றார்.

## கொழும்பில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைகோர்க்குமாறு கோரப்பட்டுள்ளது.

அத்தோடு நாம் மாறிவிட்டோம் என்று சத்தியம் செய்வதற்கும், நாம் நம்மை அறிந்துகொண்டோம் என்று சொல்வதற்கும் விளக்கொன்றை ஏற்றுவதற்கு வருகை தருமாறும் ஏற்பாட்டாளர்களால் கோரப்பட்டுள்ளது.

மேலும், யுத்தத்தில் பற்றியெரிந்த உள்ளங்களை ஆற்றுவதற்கும் மனித நேயம் மிக்க நட்பு ரீதியிலான கூட்டத்தில் பங்கேற்குமாறும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முள்ளிவாய்க்கால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளதுடன், மூதூர் நீதிமன்ற எல்லைக்குட்பட்ட பகுதியில் முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சுவதற்கு எதிராக பிறப்பிக்கப்பட்டிருந்த தடையை அகற்றுவதாக கட்டளை பிறப்பித்திருக்கிறது என்று சுகாஸ் தெரிவித்தார்.

தென்னிலங்கையிலே பாற்சோறு கொடுப்பது சட்ட விரோதமாகாது என்றால் எவ்வாறு வடக்கு, கிழக்கிலே கஞ்சி கொடுப்பது சட்ட விரோதமாகும் என்பது போன்ற பல கேள்விகளை வாதங்களாக நீதிமன்றில் தாம் முன்வைத்தார் எனவும் சட்டத்தரணி சுகாஸ் தெரிவித்தார்.

அத்துடன் இந்த வழக்கில் எதிரிகள் சார்பாக பத்துக்கும் மேற்பட்ட முஸ்லிம் சட்டத்தரணிகள் தாமாகவே முன்னிலையாகியிருந்தனர் எனவும் இதற்காக அவர்களுக்கு தான் நன்றி கூறுகிறார் எனவும் இந்த வழக்கானது தமிழ் - முஸ்லிம் இன ஒற்றுமைக்கு வலுச்சேர்க்கின்ற வழக்காக இருக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

முள்ளிவாய்க்காலில் கஞ்சி காய்ச்சி பரிமாறிய குற்றச்சாட்டில் கடந்த 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பல்கலைக்கழக மாணவி உட்பட நான்கு பேர் சம்பூர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

பின்னர் இவர்கள் மீது ஐ.சி.சி.பி.ஆர் சட்டத்தின்கீழ் வழக்கு தொடரப்பட்டு மறுநாள் திங்கட்கிழமை மூதூர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது நால்வருக்கும் எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்கமறியலை நீடித்து மன்று உத்தரவிட்டிருந்தது. ஐசிசிபிஆர் சட்டத்தின் கீழ் அவர்கள் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டிருப்பதால் அவர்களுக்கு நேற்றுப் பிணை வழங்கப்படவில்லை.

இந்நிலையில் இந்த நால்வரின் கைது தொடர்பில் சம்பூர் பொலிஸார் நடந்துகொண்ட விதம் தொடர்பாக பல்வேறு தரப்பினர் கண்டனங்கள் வெளியிடப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

## கரு ஜெயசூரிய ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணாமல் போன இலங்கை பிரஜைகளை நினைவு கூர்ந்து மூதூரில் கஞ்சி வழங்குவதற்கு மேற்கொண்டிருந்த ஏற்பாடுகளுக்கு அரச அதிகாரிகள் எதிர்வினை ஆற்றி இருப்பது தொடர்பில் நாம் மிகுந்த வருத்தம் அடைகின்றோம்.

தமக்கு நெருக்கமானவர்களின் இறப்பு மற்றும் காணாமல் போனவர்கள் பற்றி பாதிக்கப்பட்ட தரப்புகளுக்கு இருக்கும் மனவேதனையை நாம் ஒரு சமூகம் என்ற வகையில் உணர்வு பூர்வமாகப் புரிந்துகொள்ள வேண்டும். மேலும் இந்த நாட்டை இருண்ட யுகத்திற்குள் கொண்டு செல்லாமல் இருப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வது ஒட்டுமொத்த சமுதாயத்தினரதும் பொறுப்பாகும்.

அதற்கமைய அரச அதிகாரிகள் உள்ளிட்ட ஒட்டுமொத்த சமூகமும் இது போன்ற சூழ்நிலைகளின் போது நாட்டின் பொது நலனை முதன்மையாகக் கருதிச் செயல்பட வேண்டும். அப்படி இல்லாவிட்டால் எமது நாட்டை மீண்டும் இருளில் தள்ளுவதற்கு அதுவே காரணமாக அமையக்கூடும்.

ஆகையால் சமூக நீதிக்கான தேசிய இயக்கம் என்ற வகையில், நாம் கடந்த காலங்களில் இந்த நாட்டில் இடம் பெற்ற பல்வேறு துர்பாக்கிய சம்பவங்களினால் உயிரிழந்த மற்றும் காணாமல் போன அனைவரை எண்ணியும் மிகுந்த மன வேதனை அடைகின்றோம்.

மீண்டும் இதுபோன்ற சூழல்கள் ஏற்படுவதை தடுப்பதற்கும், அவர்கள் அனைவருக்கும் நீதியை நிலை நாட்டுவதற்கும் அர்ப்பணிப்புடன் செயல்படுமாறு அனைத்து தரப்புகளிடத்திலும் கேட்டுக்கொள்கின்றோம் என்றுள்ளது

## ஓ.எல்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வந்தது.

இவ்வாறான சூழலில் மினுவங்கொடை கல்வி வலயத்தின் அல் ஹமான் முஸ்லிம் மகா வித்தியாலத்தில் தமிழ் மொழி மூல பரீட்சையில் தோற்றிய 14 மாணவர்களுக்கு புவியியல் பாடத்தின் முதலாவது வினாத்தாள் மற்றும் வரைப்பட பகுதி பெற்றுக் கொடுக்கப்படவில்லை என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது.






காலைக்கதிர் Kalaikkathir




# வசந்த வாழ்வை வருவிக்கும் வைகாசி விசாகத்



பன்னிரண்டு தமிழ் மாதங்களில் இரண்டாவது மாதமான வசந்த காலத்தில் வைகாசித்திங்களில் வரும் பௌர்ணமி சிறப்பு மிக்கது. வைகாசித்திங்களில் வரும் அப்பௌர்ணமித்திருநாள் விசாக நட்சத்திரத்தோடு இணைந்து வருவதாலேயே, இம்மாதம் வைகாசி எனப்பட்டது.

ஆறு நட்சத்திரங்கள் கூடியிருப்பது போல காட்சி தருவது விசாக நட்சத்திரம்.

இந்த விசாக நட்சத்திர மண்டலத்தின் முதல் மூன்று கால்கள் துலா ராசியிலும் கடைசிக்கால் விருச்சிக ராசியிலும் காணப்படும். இந்த நட்சத்திரத்தின் அதிபதி குரு பகவான்.

இவ்வாறு, விசாக நட்சத்திரம் பல்வகைச்சிறப்புடையது ஆயினும் அவற்றில் தலையாயது விசாக நட்சத்திரத்தன்றே நம் பெருமானான முருகவேள் தோன்றிய திருநாள் என்பதாகும். அதிலும் வைகாசி விசாகத்தன்றே கந்தவேள் திருவவதாரம் செய்தருளினான் என்ற நம்பிக்கை உள்ளது.

ஆதனால் குமரக்கடவுளுக்கு விசாகன் என்றொரு திருநாமமும் உண்டு. வி என்றால் பறவை ஆகிய மயில். சாகன் என்றால் சஞ்சரிப்பவன் என்று பொருள் கொண்டு குறித்த விசாகன் என்ற சொல்லுக்கு மயிலில் எழுந்தருளும் பெருமான் என்று பொருள் கொள்வதும் உண்டு.

இந்த வைகாசி மாதத்தில் இடப ராசியில் இருக்கும் நவக்கிரகங்களின் தலைவனான சூரியன் தனது ஏழாம் பார்வையாக விசாக நட்சத்திரத்தைப் பார்ப்பதும் சிறப்பு. இந்த நட்சத்திரத்தின் தேவதையும் ஆறுமுகத்து அருள்வள்ளலே ஆகும்.

எனவே இந்த வைகாசி விசாக நாளில் முருகப்பெருமானை நோன்பு நோற்றும் வழிபாடுகள் செய்தும் விழா எடுத்தும் கொண்டாடுவதுசிறப்பானதாகும். அன்றைய நல்ல நாளில் திருச்செந்தூர் முதலிய திருக்கோயில்களில் பெருவிழா நடக்கிறது.

முக்கியமாக திருச்செந்தூருக்காக பல நூறு மைல்கள் தொலைவிலிருந்து காவடிகளோடு பாத யாத்திரையாக நடந்து வரும் பக்தர்கள் வைகாசி விசாகத்தன்று சமுத்திரத்தில் தீர்த்தமாடி கந்தவேளின் பெருங்கருணைக்கு ஆளாகிறார்கள்.

இவ்வாறு முருகனுக்கு உகந்ததான விசாகத்தன்று சிவாலயங்களிலும் வசந்தோற்சவம் முதலிய விழாக்கள் நிகழ்த்தப்படுகின்றன. தேவிஆலயங்களிலும் கிராமிய வழிபாட்டு ஆலயங்களிலும் திருக்குளிர்த்தி, தீமிதிப்பு, பொங்கல் விழா போன்றன முன்னெடுக்கப்படுகின்றன.

முக்கியமாக இலங்கை மரபிலே வைகாசி விசாகப்பொங்கல் மிகச்சிறப்பானது.

சிலப்பதிகார நாயகியான கண்ணகிக்கு விழா எடுத்து கண்ணகை வழக்குரைகாதைமுதலிய பாடல்களை பக்தியோடு படித்து கண்ணகையின் கருணையைப்பெறுவது நம் மரபு. அதன் உச்ச நிகழ்ச்சியை வற்றாப்பளையில் நாம் அவதானிக்கலாம்.

இவை மட்டுமன்று. இத்திருநாளே தருமராஜனான எமன் அவதரித்தநாள். வேதம் தமிழ் செய்த மாறன் என்று போற்றப்படும் வைணவ ஆழ்வார்களில் தலைமைச் சிறப்புக் கொண்ட நம்மாழ்வார் அவதரித்த திருநாள்.



புத்த பகவான் சித்தார்த்தராகப் பிறந்ததும் புத்தரானதும் பரிநிர்வாணம் எய்தியதும் வெசாக் என்று கொண்டாடப்படும் வைகாசி விசாகப் பௌர்ணமியே.

இந்த 2022 சுபகிருது ஆண்டு வைகாசி மாதம் இரண்டு பௌர்ணமிகளைக் கொண்டதாகச் சிறப்போடு மிளிர்கிறது. அதன் அடிப்படையில் 16.05.2022 திங்கட்கிழமை மற்றும் 12.06.2022 ஞாயிற்றுக்கிழமை என்று இருமுறை வைகாசி விசாக நட்சத்திரம் வருகிறது.

அந்த இரண்டு தினங்களும் முருக வழிபாட்டுக்கு உகந்தனவே. அவரவர் மரபு,தேசாச்சாரம், பஞ்சாங்கத்தின் அடிப்படையில் இவற்றில் ஒரு நாளில் வைகாசி விசாக வழிபாடுகளை ஆற்றலாம். ஆயினும் நம் நாட்டு பஞ்சாங்கங்களின் அடிப்படையில் 16.05.2022 திங்கட்கிழமையாகிய பௌர்ணமி சேர்ந்த விசாகத்தன்றே வைகாசி விசாக முருக வழிபாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

நாமும் இந்து தத்துவ பண்பாட்டு மரபில் பெருமையும் சிறப்பும் மிக்க வைகாசி விசாக நன்நாளில் இறைவழிபாடுகளை ஆற்றி இப்போதுள்ள துன்ப இருள் அகன்று இன்ப ஒளி திருமுருகப் பேரொளியாகப் பரவ பிரார்த்திப்போமாக.

**மயூரகிரி சிவாச்சார்யார்**

# மெய்ப்பொருள் காண்பதறிவு




இந்த உலகம் பொருள்களால் ஆயது. பொருள்கள் தம்முள் வேறுபட்ட தனித்தன்மை உடையன. சில பொருள்கள் வேறுபட்டு விளங்கினாலும் பிறிதொரு பொருளுடன் ஒன்றும் இயல்புடையன. சில தனித்தன்மைகள் பெற்றே விளங்குவன. மாந்தர் வாழ்க்கை பொருள்களுடன் தொடர்புடையது. வாழ்வின் துறைதோறும் வாழ்வு முழுவதும் பொருள்களுடன் யாதேனும் ஒரு உறவு இல்லாது வாழ்க்கை அமைவதில்லை; அமையாது; அமைய முடியாது. அதனால்தான் திருக்குறள் 'பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை'' என்றது.

பொருள்களால் ஆயது வாழ்க்கை. இந்தப் பொருள்களை பொருள்களின் தன்மைகளை உள்ளவாறறிந்து அப்பொருள்தன்மைக்குஏற்பவும் வாழ்க்கைக்குரிய வகையிலும் பயன்படுத்த அறிந்துகொள்ள வேண்டும். பொருள்களின் தன்மையறிதலுக்கு தனித்திறனும் பயிற்சியும் அறிவும் வேண்டும். பல பொருள்கள் தோற்றமான நிலையிலேயே தொடர்ந்து இருப்பதில்லை. மாறும் தன்மை உடையன உண்டு. சில பொருள்கள் நிலையாயின போலத் தோன்றும் பெயர் பெற்று விளங்கும். ஆனால் நிலையில்லாதனவாகிப் போதலும் உண்டு. சில நன்மை தருவது போலக் காட்டி இன்பம் தரும். சான்றாக நம் உடலுக்கு 'மெய்' என்று பொருள். ஆனால் இது உண்மையல்ல. காலத்தால் கேடுறதலாம் சர்க்கரை இனிமையானது, சர்க்கரையால் விளைவது பெருந்துன்பம், வெந்தயம் கசப்பான பொருள் ஆனால் வாழ்க்கைக்கு நலம் தருவது இன்பம் தருவது.

குளிர்ச்சியானவையாக இருப்பவை சூட்டையே தருகின்றன. சூடாக இருப்பவை குளிர்ச்சியையே தருகின்றன. ஆகவே பொருளின் தோற்றம் பார்க்காமல் பொருளின் தன்மை, அப்பொருளால் விளையும் பயன் ஆகியன தெரிந்து அதற்கேற்பப் பயன்படுத்தல்வேண்டும் இத்தகு அறிவு சராசரி மனிதர்களுக்குக் கிடைப்பதில்லை. ஞானிகளுக்கே உண்டு. சாதாரண மக்கள் தோற்றத்தால் கவர்ச்சிக்கப்படுவர். தற்காலிகமானவையாக இருப்பினும் உடனடியாகப் பயன்களை எதிர்பார்ப்பர் எப்பொருளையும் ஆழ்ந்துநோக்குவதில்லை. வேளாண்மைக்குப்பயன்படுத்தும் இரசாயன உரங்கள் உரமே இல்லை. இரசாயன உரங்கள் ஒருவகைத் தூண்டு சக்தியேயாகும். ஆனால் நமது மக்கள் இவைதான் உரம் என்று நம்பினார்கள். இந்த உரத்தையே நம்பி குப்பை உரம் தயாரிப்பதை மறுத்தார்கள். இதனால் நிலத்தின் பூசாரம் குறைந்ததுதான் மிச்சம். அறியாமை அறிவாக ஏற்றுக்கொள்ளப்படுதல் இன்றைய பெரு வழக்கு. இதற்கு அப்பரடிகள் ஒரு கதை கூறி விளக்கினார்.

ஆமைசாப்பிடும் மக்கள் ஆமையை உலைப்பானையில் போட்டு வேகவைத்தார்கள். உலைப் பானையில் தண்ணீர் இளஞ்சூடாக இருக்கும்போது ஆமை இன்பப் போதையில் துள்ளி விளையாடும். ஆனால் அந்தச் சூடு இன்பமாகவே நீடிக்கப்போவதில்லை. விரைவில் கொதிநிலைக்கு மாறும், ஆமை அழியும். இதனை உணரும் சக்தி ஆமைக்கு இல்லை. ஆமைக்கு மட்டும்தானா? மனிதர்களில் பலரும் இப்படித்தான் வாழ்கின்றனர். பெரும்பாலான மக்கள் காலப்போக்கில் துன்பம் விளைவிப்பனவற்றையே இன்பமெனக் கருதி வாழ்ந்து ஏமாற்றத்துக்கு ஆளாகின்றனர். இதனைத் திருவள்ளுவர் ''எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு'' (திருக்குறள் - 355) என்றார்.

**லி.சுபோதினி**

# தேசிய கல்வியியற் கல்லூரியில் பெரும் குருதிக்கொடை முகாம்



(எம்.ஏ.றமீஸ்)

அக்கரைப்பற்று இரத்த வங்கியில் ஏற்பட்டுள்ள இரத்த தட்டுப்பாட்டினைக் கருத்திற் கொண்டு அட்டாளைச்சேனை தேசிய கல்வியியற் கல்லூரியில் ஏற்பாடு செய்யப்பட்ட இரத்த தான நிகழ்வு நேற்று (வியாழக்கிழமை) இடம்பெற்றது.





'உதிரம் கொடுப்போம் உயிர் காப்போம்'எனும் தொனிப் பொருளின் கீழ் பீடாதிபதி சட்டத்தாணி கே.புண்ணிய மூர்த்தி தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வின்போது கல்வியியற் கல்லூரியின் 2022ஃ2024 ஆம் பிரிவு ஆசிரிய பயிலுநர்கள், கல்வி, கல்விசாரா உத்தியோகத்தர்கள் நூற்றுக்கு மேற்பட்டோர் கலந்துகொண்டு இரத்த தானம் செய்தமை குறிப்பிடத்தக்கது.

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையுடன் இணைந்து அட்டாளைச்சேனை தேசிய கல்வியற் கல்லூரி ஏற்பாடு செய்த இந்த இரத்த தான நிகழ்வு முழு நாள் நிகழ்வாக இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.(05)

# நானுஓயா டெஸ்போட்டில் சொகுசு கார் விபத்து

## நால்வர் வைத்தியசாலையில் சேர்ப்பு



நுவரெலியா-ஹற்றன்பிரதான வீதியில் நானுஓயா டெஸ்போட் பகுதியில் பயணித்த சொகுசு கார் ஒன்று சாரதியின் கட்டுப் பாட்டையிழந்தது வீதியோரத்தில் உள்ள கற்பாறையில் மோதி புதன்கிழமை மாலை விபத்துக் குள்ளானது.

மேற்படி விபத்தில் நால்வர் காயமடைந்து நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலை யில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கண்டி - அக்குரணை பகுதியிலிருந்து நுவரெலியாவிற்கு வருகைத்தந்து நானுஓயா டெஸ்போட் வழியாக கொழும்பு நோக்கிசென்றசொகுசுகார்சாரதியின் கட்டுப்பாட்டைஇழந்துவீதியின்இடது பக்கமாக இழுத்துச் செல்லப்பட்டு கற்பாறையில் மோதி விபத் துக்குள்ளானதாகத் தெரிவிக்கப் படுகிறது. சம்பவம் தொடர்பில் நானுஓயா பொலிஸார் மேலதிக விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர்(05)

# முல்லையில் கரும்புள்ளியான் குள நீர் விநியோகதிட்ட அடிக்கல் நாட்டு விழா



முல்லைத்தீவுமாவட்டம்மாந்தை கிழக்குபிரதேசசெயலகத்திற்குற்பட்ட கரும்புள்ளியான்குளநீர்விநியோக திட்ட அடிக்கல் நாட்டு விழா புதன் கிழமை இடம்பெற்றது.

வடமாகாண ஆளுநர் சாள்ஸ் அவரகளால் குறித்த குடிநீர் திட்டத்திற்கான பெயர்பலகை திரை நீக்கம்செய்துவைக்கப்பட்டிருந்தது.

முல்லை மாவட்ட செயலாளர் மற்றும் யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர், மற்றும் மாந்தை கிழக்கு பிரதேசசெயலாளர், பிரதேச செயலகஉத்தியோகத்தர்கள்மற்றும் பொது அமைப்புக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

குறித்த குடிநீர் திட்டம் உலக வங்கியின் 1856 மில்லியன் மேற்பட்ட நிதிப்பங்களிப்பில் நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினர் மற்றும் நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)



அதனை தொடர்ந்து அமைச்சர் ஜீவன் தொண்டமானால் குடிநீர் திட்டத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டதுடன், சம நேரத்தில் ஏனைய அதிதிகளினாலும்அடிக்கல் நாட்டப்பட்டிருந்தது.

நிகழ்வில்வடமாகாண ஆளுநர், மாகாணபிரதம செயலாளர்,அமைச்சின் செயலாளர்,நாடாளுமன்ற உறுப்பினர்களான காதர் மஸ்தான், குலசிங்கம் திலீபன், மாகாண நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் அதிகாரிகள், மாகாண நீர்ப்பாசன திணைக்கள அதிகாரிகள் மற்றும்



# கிளிநொச்சி குளம் மாசுபடுவது தொடர்பாக மாவட்ட அபிவிருத்திக் கூட்டத்தில் ஆராய்வு





குடிநீருக்காக நீர்பெறும் கிளிநொச்சி குளம் மாசுபடுவது உறுதியெனில் பொதுநல வழக்கு தொடர வேண்டும் என கூறப்பட்ட நிலையல் மாற்று இடத்தை அடையாளம் காண தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டத்தில் இவ்விடயம் நேற்று நீண்ட நேரம் பேசப்பட்டது.

கிளிநொச்சி மக்களிற்கான குடிநீர் வழங்கும் திட்டத்திற்காக இரணைமடு குளத்திலிருந்து கிளிநொச்சி குளத்திற்கு நீர் பெறப்பட்டு சுத்திகரித்து வழங்கப்பட்டு வருகிறது.

இந்தநிலையில், கிளிநொச்சிகுளத்தில்வைத்தியசாலை கழிவுகள், இராணுவ முகாம் மற்றும் நகர்ப்புற கழிவுகள், தொழிற்சாலை கழிவுகள் கலப்பதால் சுத்தமான குடிநீரை சுத்திகரிப்பதில் சிக்கல் காணப்படுவதாக சம்பந்தப்பட்ட சபையால் வழங்கப்பட்ட தகவலை இரணைமடு விவசாய சம்மேளனத்தின் செயலாளர் முத்து சிவமோகன் சபையில் குறிப்பிட்டார்.

இந்தவிடயம்தொடர்பில்முன்னாள்வடக்குமாகாண சபை உறுப்பினர் வை. தவநாதம் குறிப்பிடுகையில் – நீரை சுத்திகரிக்க முடியாமையால் அதிக குளோரின் பாவிக்கப்படுவதை உணர முடிவதாகவும், அதன் தன்மை அதிகமாகக் காணப்படுவதைக் காண்பதாகவும் தெரிவித்தார்.

குளியலறை பயன்பாட்டில் இந்த விடயத்தை தானும் அவதானித்ததாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் தெரிவித்தார்.

மக்களுக்கு குடிநீர் வழங்கும் பகுதியில் இவ்வாறான கழிவுகள் கலப்பது தொடர்பில் உண்மை இருப்பின், இதுவரை மக்கள் பயன்படுத்திய குடிநீர் தொடர்பில் பொதுநல வழக்கு தொடர வேண்டும் என முத்து சிவமோகன் சபையில் தெரிவித்தார்.

மேற்படி விடயம் பாரதூரமான விடயம் என்பதால் மாற்று இடம் ஒன்றை அடையாளம் கண்டு அங்கிருந்து நீரை பெற வேண்டும் எனவும், ஜனாதிபதி கிளிநொச்சிக்கு வரவுள்ள நிலையில் அந்தத் திட்டத்திற்காக நிதியை பெறுவது தொடர்பில் சம்பந்தப்பட்ட அமைச்சரையும் அழைத்து கலந்துரையாடுவோம் எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

மேலும், பொதுநலவழக்கு தொடர்பிலும்சிவமோகன் தெரிவித்துள்ள நிலையில், கிளிநொச்சி குளத்தையும் பாதுகாக்காமல் மாசுபட விடவும் விட முடியாது எனத் தெரிவித்த அமைச்சர், சுத்தமான குடிநீரை வழங்கக் கூடிய பகுதியை அடையாளம் கண்டு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இந்த நிலையில், இலங்கையில் உள்ள நீர் சுத்திகரிப்பு நிலையங்களில் உயரிய சுத்திகரிப்பு நிலையம் கிளிநொச்சியில் அமைந்துள்ளதாக நீர்வழங்கல் சபை பொறியியலாளர் தெரிவித்தார்.

ஆனாலும், கிளிநொச்சி மாவட்டத்தின் அனைத்து பகுதிக்குமான குடிநீரை வழங்க போதுமானதாக இருக்காது எனவும் அவர் தெரிவித்தார். (05 - 113)

காலைக்கதிர்
Kalaikkathir

# போக்குவரத்துக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள்மீது தாக்கு

போக்குவரத்து கடமையில் ஈடுபட்டிருந்த இரு பொலிஸ் உத்தியோகத்தர்களை சுற்றிவளைத்து தாக்கியதாகக் கூறப்படும் பணி இடைநீக்கம் செய்யப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உட்பட நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என நாரஹென்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

நாரஹென்பிட்டி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களே இவ்வாறு தாக்குதலுக்குள்ளாகியுள்ளனர்.

இவர்கள் இருவரும் நாரஹென்பிட்டி , மகாவத்த பிரதேசத்தில் போக்குவரத்து கடமையில் ஈடுபட்டிருந்தபோது தாபரே மாவத்தையிலிருந்து எல்பிட்டிகல நோக்கிப் பயணித்த கார் ஒன்று அதிக வேகத்துடன் பயணிப்பதை அவதானித்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

பின்னர், இந்தக் காரானது எல்பிட்டிகல பிரதேசத்தில் ஹோட்டல் ஒன்றிற்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்துள்ள நிலையில் அதில் பயணித்தவர்கள் மதுபானம் அருந்திக் கொண்டிருந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது, அங்குச் சென்ற இரு பொலிஸ் உத்தியோகத்தர்களும் காரை வீதியிலிருந்து எடுக்குமாறு அவர்களிடம் கூறியதையடுத்து சந்தேக நபர்கள் இந்த இரு பொலிஸ் உத்தியோகத்தர்களையும் தாக்கியுள்ளனர் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இதனையடுத்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நாரஹென்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# சட்டவிரோதமாக அட்டைகளை பிடித்த நால்வர் வடமராட்சியில் கைதாகினர்

வடமராட்சிமாமுனைகடற்பகுதியில் சட்டவிரோதமாக இரவு நேரத்தில் அட்டைகளை பிடித்த நான்கு நபர்கள் இரண்டு படகுகளுடன் புதன்கிழமை கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சட்டவிரோத தொழில் முறைகளைத் தடுக்கும் நோக்கில் வெற்றிலைக்கேணி கடற்படையினர் திடீர் சுற்றிவளைப்புகளை மேற்கொண்டு பலரை கைது செய்துவருகின்றனர்

இந்த நடவடிக்கையின் ஒரு பகுதியாகசெவ்வாய்க்கிழமைஅதிகாலை மாமுனை கடற்பகுதியில் குறித்த நால்வரும் கைது செய்யப்பட்டனர் என கடற்படை தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட நால்வரும் கடற்படை முகாம் அழைத்து வரப்பட்டு விசாரணைகளின்பின்னர்மேலதிகசட்ட நடவடிக்கைகளுக்காக யாழ்ப்பாணம் கடற்றொழில் பரிசோதகரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.(05)

# வெள்ளம் பாதித்த விவசாயிகளுக்கு அடுத்த வாரம் இழப்பீடு கிடைக்கும்

## ஹரீஸ் எம்.பியின் வேண்டுகோளுக்கு மஹிந்த நடவடிக்கை!



(நூறுல் ஹுதா உமர்)

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாண விவசாயிகளின் நஷ்டஈட்டை வழங்குவதில் காலதாமத நிலை நீட்டித்த நிலையில் நேற்று (புதன்கிழமை) அமைச்சர் மஹிந்த அமரவீர, இராஜாங்க அமைச்சர்களான டீ.பி.ஹேரத், முஹான் டீசில்வா அமைச்சின் செயலாளர், விவசாய காப்புறுதி திணைக்கள அதிகாரிகளை விவசாய அமைச்சில் சந்தித்த நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் விவசாயிகளுக்கு நஷ்ட ஈட்டை வழங்காமையால் அவர்கள் பாதிக்கப்பட்ட விதம், அடுத்த பயிர் செய்கைக்கு அவர்கள் தயாராக உள்ள நிலையில் அவர்கள் எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பிலும் விளக்கி உடனடியாக பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்டஈட்டை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை முன்வைத்தார்.

இவ்வருட ஆரம்பத்தில் பெய்த மழை காரணமாக கிழக்கு மாகாணம், அதிலும் குறிப்பாக அம்பாறை மாவட்டம் வெள்ளப்பெருக்கில் வெகுவாக பாதிக்கப்பட்டது. இதன்போது அறுவடைக்கு தயாராக இருந்த பல்லாயிரம் ஏக்கர் நெல் வேளாண்மை வெள்ளத்தில் அள்ளுண்டு பாதிக்கப்பட்டது. ஆயிரக்கணக்கான விவசாயிகளுக்கு இதனால் பலத்த நஷ்டம் ஏற்பட்டது. இந்த விவசாயிகளுக்கு நஷ்டஈட்டை பெற்றுக்கொடுக்கும் நோக்கில் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் அவர்கள் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவை ஏற்கனவே சந்தித்து விவசாயிகளின் பாதிப்பு நிலைகளை விளக்கி நஷ்டஈட்டை வழங்க உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகோள் விடுத்திருந்தார்.

அதனையோட்டி விவசாய அமைச்சர் உரிய அதிகாரிகளுக்கு நஷ்டஈட்டை வழங்க தேவையான நடவடிக்கைகளை துரிதமாக எடுக்குமாறு அன்று பணித்திருந்தார். இது சம்பந்தமான மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, விண்ணப்பங்கள் பூரணப்படுத்தப்பட்டும் மந்தகதியில் இருந்த நஷ்டஈடு வழங்கும் பணிகள் தொடர்பில் கேட்டறிந்த அமைச்சர் மஹிந்த அமரவீர அதிகாரிகளை கடிந்து கொண்டதுடன் அடுத்த வாரத்தினுள் இந்த நஷ்டஈடுகளை வழங்குமாறும் உத்தரவிட்டுள்ளார்.

அமைச்சின் செயலாளர், விவசாய காப்புறுதிக்கு பொறுப்பான அதிகாரிகள் மற்றும் நஷ்டஈட்டுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடிய அமைச்சர் அடுத்த வாரம் நானோ அல்லது இராஜாங்க அமைச்சரோ நேரடியாக சென்று அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்ட விவசாயிகளுக்கு உரிய நஷ்டஈட்டை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர இதன்போது அதிகாரிகளை கேட்டுக்கொண்டார்.

இந்த விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுத்த அமைச்சர், அமைச்சின் செயலாளர், அதிகாரிகளுக்கு அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்ட விவசாயிகள் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் நன்றிகளை தெரிவித்தார். இதனூடகபாதிக்கப்பட்டவிவசாயிகள்நன்மையடைய உள்ளமை குறிப்பிட்டத்தக்கது.(05)

# கூமாங்குளம் வீட்டு வளாகத்தில் நுழைந்த 5 அடி நீளமான முதலை



வவுனியா, கூமாங்குளம்கிராமத்தில் வீட்டு வளாகத்தில் 5 அடி நீள முதலை ஒன்று நுழைந்துள்ளது.

இதனைஅவதானித்தஉரிமையாளர் வனஜீவராசி திணைக்களத்தினருக்கு தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து குறித்த இடத்திற்குவந்தவனஜீவராசிகள்உத்தியோகத்தர்கள் கிராமத்தவர்களின் ஒத்துழைப்புடன் முதலையை பிடித்து காட்டில் பாதுகாப்பாக விடுவித்தனர். (05)

# கடலுக்குள் விழுந்த கனரக ஹென்டர் வாகனம் மீட்பு



கடலுக்குள்விழுந்தகனரகஹென்டர் வாகனம் நீண்ட போராட்டத்தின் பின்னர் மீட்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகர சபைக்குட்பட்ட சாய்ந்தமருது பௌஸி மைதானத்திற்கு அருகே புதன்கிழமை மாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அண்மையில்இப்பகுதியில் ஏற்பட்ட கடலரிப்பைத் தடுப்பதற்காக கரையோரம் பேணல் திணைக்களம் கண்காணிப்பில் பாரிய கற்கள் போடப்பட்டு வருகின்றன.

இதன் தொடர்ச்சியாக கல் அணைகள் அமைத்து கற்களைப் போட்டு நிரப்பும் முதற்கட்ட நடவடிக்கைக்காக பாரிய கற்களை கொட்டுவதற்கு பயன்படுத்தப்பட்டு வந்த ஹென்டர் கனரகடிப்பர்வாகனம்வழமைபோன்று கற்களை கடலுக்குள் கொட்டுவதற்காக சென்ற நிலையில் குடை சாய்ந்து கவிழ்ந்தது.



எனினும் குறித்த வாகனத்தை செலுத்திய சாரதி தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளதுடன் பொதுமக்கள்ஏனையகனரக ஜே.சி.பி இயந்திரத்தின் உதவியுடன் கடலுக்குள் விழுந்த வாகனம் நீண்ட போராட்டத்தின் பின்னர் மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையில் சிற்ப திரை நீக்க விழா சிறப்பாக நடைபெற்றது



(பாறுக் ஷிஹான்)

கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையில் வரலாற்று நிகழ்வுகளை தாங்கிய சிற்பதிரைநீக்க விழா சிறப்பாக இடம்பெற்றது.

இந்நிகழ்வுவைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் ரங்கசந்திரசேன தலைமையில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரும் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரும் ஆகிய டாக்டர் இரா.முரளீஸ்வரன் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

இந்த வரலாற்று நிகழ்வுகளை தாங்கிய சிற்பத்தின் நிர்மாணத்திற்கான அனுசரணையை கல்முனை சரவணாஸ் ஜுவலறி உரிமையாளர் க.பிரகலதன் வழங்கி இருந்தார்.

இந்நிகழ்வில் வைத்தியசாலையின் வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், தாதிய உத்தியோகத்தர்கள் மற்றும் வைத்தியசாலையின் ஊழியர்கள், வைத்தியசாலையின் அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள் மற்றும் நலன் விரும்பிகள் அனைவரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.(05)



# போலி நாணயத்தாள்களுடன் சந்தேகநபர் ஒருவர் கைது

வீரகெட்டிய, மெதமுலன பகுதியில் ஆயிரம் ரூபா போலி நாணயத் தாள்களுடன் சந்தேக நபரொருவர் தங்காலை பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வீரகெட்டிய, மெதமுலன பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

தங்காலை பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் ஹெரோயின் போதைப்பொருள் சுற்றிவளைப்பு நடவடிக்கைக்குச் சென்று சந்தேகநபரின் வீட்டை சோதனையிட்ட போது இந்த போலி நாணயத்தாள்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

விசாரணையில் சந்தேக நபரிடமிருந்து ஆயிரம் ரூபா போலி நாணயத் தாள்கள் 9 கைப்பற்றப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து, சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக வீரகெட்டிய பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (05)

# பொன்னாவெளி விவகாரம் பொய்யுரைக்கும் சிறீதரன்

## கண்டிக்கிறார் ஈ.பி.டி.பி. ரங்கன்

பொன்னாவெளிகிராமத்திலுள்ள மக்களை வலுக்கட்டாயமாக வெளியேற்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் அவருடன் சேர்ந்தவர்களும்முயற்சிக்கின்றனர் என்ற சிறீதரனின் அப்பட்டமான பொய்யைவன்மையாககட்டிப்பதாக என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடக பேச்சாளர் ஐயாத்துரை சிறீரங்கேஸ்வரன்தெரிவித்துள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் இவ்வாறு தெரிவித்துள்ள அவர் மேலும் கூறுகையில் –

இலங்கைதமிழ்அரசுக்கட்சியின் (தமிழ் தேசிய கூட்டமைப்பின்) உள்ளூர் அதிகர சபைக்கான தேர்தல் அறிக்கை 2018 ஜனவரி இறுதிப்பகுதியில் வவுனியாவில் உள்ளஅக்கட்சியின்அலுவலகத்தில் கட்சியின் தலைவரும் அன்றைய நாடாளுமன்ற உறுப்பினருமாக இருந்த மாவை சேனாதிராசாவால் கூட்டமைப்பின் தலைவரும் அன்றைய எதிர்க்கட்சி தலைவருமாகிய இரா சம்பந்தனிடம் வைபவரீதியாக கையளித்து வெளியிட்டு வைக்கப் பட்டிருந்தது.

அதல் கிளிநொச்சி பிரதேசத்தில் உள்ளபொன்னாவெளியில்சிமெந்து உற்பத்திக்கும் வேலைவாய்ப்புக்காகவும் சுண்ணக்கல் அகழ்வு மேற்கொள்வதென உத்தியோக பூர்வமாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதுமட்டுமல்லாது இவையெல்லாம் அப்பகுதி மக்களின் வேலை வாய்ப்புக்காகவும் பிரதேச சபையின்வருமானத்துக்காகவும்நாட்டின் கட்டுமாணத்துறையின்மூலப்பொருளான சிமெந்து தேவையை பூர்'த்தி செய்யும் வகையிலும் அன்றைய பிரதமருடன் பேச்சு நடத்தி முன்னெடுக்கப்படும்எனவும் குறிப்பிட்டிருந்தனர்.

ஆனால்இன்று இவ்விடயத்தை கடற்றொழில் அமைச்சரும் கிளிநொச்சி மாவட்டத்தின் அபிவிருத்திக் குழுவின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா துறைசார் அதிகாரிகளுடன் ஆய்வுளை மேற்கொண்டு அதன் பெறுபேறுகளின் அடிப்படையில்அதற்கானவிஞ்ஞானபூர்வமான ஆய்வுகளையும் ஆராய்ந்து தீர்மானிக்கும் முன்னரே அங்கு தமிழரசுக்கட்சியைசார்ந்தவர்களும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியை சார்ந்தவர்களும் மற்றும் சமத்துவம் பேசுபவர்களும் அயற்கிராமங்களிலிருந்து சிலரை அழைத்துவந்து தவறான கருத்துக்களை பரப்பி இவ் ஆய்வுகளை மேற்கொள்ள விடாது குழப்பத்தை ஏற்படுத்தினர்.

உண்மையில் இப்பகுதியில் யுத்தத்திற்கு முன்னரே நிலம் உவர் நீரானதை அடுத்து மக்கள் இடம்பெயர்ந்து சென்று விட்டார்கள். அப்பகுதியில் மூன்று ஆலயங்கள் மட்டுமே உள்ளன. தவிர மக்கள் குடியிரப்புக்கள் எவையும் அங்கு இருக்கவில்லை.

அவ்வாறிருந்தும் அப்பகுதியில் உள்ள 6 ஏக்கர் நிலத்தை பூநகரி பிரதேசசபையின் முன்னாள் தவிசாளரின் நெருங்கிய உறவினர்கள் ரோக்கியோ நிறுவனத்திற்கு சுண்ணக்கல் அகழ்வுக்காகவென்றே விற்பனை செய்துள்ளனர்.

இவ்வாறான சூழலில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சி மக்களுக்கு நற்பயனை விளைவித்துவிடும்,அதனூடாகஅவருடைய செயற்பாடுகளுக்கு மக்கள் அங்கீகாரம் கிடைத்துவிடும் என்பதை தெரிந்துகொண்ட இக்கட்சிகள் இவ்வாறாக இதனைத் தடுக்கும் நோக்குடன்கபடத்தனமாகசெயற்பட்டுள்ளனர்.

ஆகவே சிறீதரனுடைய கருத்து என்பது 2018 இல் அவர்கள் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் முன்மொழிந்தும் தற்போது அதை டக்ளஸ் தேவானந்தா நடைமுறைப்படுத்தப் போகின்றார் என்பதற்காக அதை எதிர்த்து நாடாளுமன்றில் கருத்து சொல்வதுடன் அரச அதிகாரிகளையும் தவறானவர்கள் என சித்திரிக்க முயல்வதை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம். என்றும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.(05)



காலைக்கதிர் Kalaikkathir

# வடமேல் மாகாண அதிபர், ஆசிரியர் பிரச்சினைகளை துரிதமாக தீர்க்க கிழக்கு ஆளுநர் நஸீர் பணிப்புரை



(எம்.எம்.ஜெஸ்மின்)

வடமேல் மாகாணத்தில் காணப்படும் அதிபர், ஆசிரியர் பிரச்சினைகளை எதிர்வரும் ஜூன் 30 ஆம் திகதிக்கு முன்னதாக தீர்க்க நடவடிக்கை எடுக்குமாறு ஆளுநர் ஹாபிஸ் நஸீர் அஹமட் அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.



கடந்த 14 ஆம் திகதி வடமேல் மாகாண ஆளுநரின் அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது இதற்கான பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

வடமேல் மாகாணத்தில் நிலவும் அதிபர் இடமாற்றம் தொடர்பான பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வு காண்பது குறித்தும், ஆசிரியர் பற்றாக்குறை போன்ற விடயங்கள் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டது. அதன் போது மாகாண மட்டத்தில் அதிபர் இடமாற்றம் குறித்த பிரச்சினை நீண்டகாலமாக தீர்க்கப்படாமல் இருப்பதை ஆளுநர் அவதானித்தார். அதனையடுத்து அதிபர் இடமாற்றங்கள் குறித்து துரித நடவடிக்கை எடுக்குமாறு ஆளுநரின் செயலாளர் மற்றும் மாகாண பிரதம செயலாளர் ஆகியோருக்கு ஆளுநர் பணிப்புரை விடுத்தார்.

இதன் போது கருத்து தெரிவித்த ஆளுநரின் செயலாளர், அதிபர் இடமாற்றங்கள் தொடர்பான விவரங்களை இணையத்தளம் ஊடாக விரைவில் வெளியிட ஏற்பாடு செய்வதாக உறுதியளித்தார்.

இதன் போது ஒரே பாடசாலையில் ஐந்து வருடங்களுக்கும் மேலாக தொடர்ச்சியாகக் கடமையாற்றுவோர், கஷ்டப் பிரதேச பாடசாலைகளில் பணியாற்றுவோர் ஆகியோருக்கு முன்னுரிமை வழங்குமாறு கௌரவ ஆளுநர் ஆலோசனை வழங்கியுள்ளார். மேலும் ஏனைய மாகாணங்களில் இருந்து வடமேல் மாகாணத்தில் கடமைபுரிவோரை துரிதமாக சொந்த மாகாணங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் செல்வதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறும் அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

அதனையடுத்து, மாகாணப் பாடசாலைகளில் காணப்படும் ஆசிரியர் பற்றாக்குறையை தீர்க்க உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து வலியுறுத்தினார். ஜனாதிபதி மற்றும் அரசாங்கம் ஆசிரியர் பற்றாக்குறையை தீர்ப்பதற்கான அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்திருக்கும் நிலையில் குறித்த விடயத்தில் இனியும் தாமதம் செய்யக்கூடாது என்று அதிகாரிகளுக்குக் கண்டிப்பான உத்தரவு பிறப்பித்துள்ளார். மேலும் அதற்கான அனைத்து நடவடிக்கைகளிலும் தனது பூரண ஒத்துழைப்பை வழங்குவதாகவும் ஆளுநர் உறுதியளித்துள்ளார்.

எதிர்கால சந்ததியை வலுப்படுத்தும் வகையில் மாகாண மட்டத்திலான கல்வி நடவடிக்கைகளில் மாற்றங்களை ஏற்படுத்தி, குறைபாடுகளைக் களைந்து, கல்வி அபிவிருத்திக்கான அனைத்து நடவடிக்கைகளுக்கும் தனது ஆதரவை வழங்குவதாகவும் ஆளுநர் ஹாபிஸ் நஸீர் அஹமட் தொடர்ந்தும் குறிப்பிட்டார்.

குறித்த கலந்துரையாடலில் வடமேல் மாகாண பிரதம செயலாளர், ஆளுநரின் செயலாளர், மாகாண அமைச்சுகளின் செயலாளர்கள், வடமேல் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர், வடமேல் மாகாணத்தின் கல்விப் பணிப்பாளர் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தனர்.(05)

# நுவரெலியா மாநகரசபைக்கு புதிய ஆணையர் நியமனம்



நுவரெலியா மாநகர சபையின் புதிய மாநகர ஆணையாளராக இலங்கை நிர்வாக சேவையின் முதல் தர அதிகாரியான டி. பி.விஜயதிலக நேற்று (வியாழக்கிழமை) தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

(05)

# ஓட்டோ கவிழ்ந்தமையால் சபுகஸ்கந்தயில் விபத்து

## ஒருவர் சாவு: ஒருவர் காயம்

சபுகஸ்கந்த பொலிஸ் பிரிவிற்குற்பட்ட படலந்த பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மற்றுமொருவர் காயமடைந்துள்ளார் எனச் சபுகஸ்கந்த பொலிஸார் தெரிவித்தனர்.

அப்கொட் பிரதேசத்தைச் சேர்ந்த 27 வயது நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

படலந்த நோக்கிப் பயணித்த ஓட்டோ ஒன்று சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகிக் கவிழ்ந்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தின்போது ஓட்டோச் சாரதியும் பின்புறத்தில் அமர்ந்திருந்த பயணியொருவரும் காயமடைந்துள்ள நிலையில் ராகமை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் ஓட்டோ சாரதி உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரது சடலம் ராகமை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைச் சபுகஸ்கந்த பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# பணிப்பாளர் பைஸல் ஆப்தீனுக்கு சர்வமத ஏற்பாட்டில் பிரியாவிடை





(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

முஸ்லிம் சமய கலாசாரத் திணைக்களத்தின் பணிப்பாளராக கடந்த ஒரு வருடத்துக்கு மேல் கடமையாற்றி பதவியுயர்வு பெற்றுச்செல்கின்ற பணிப்பாளர் பைஸல் ஆப்தீனுக்கான பிரியாவிடை நிகழ்வொன்று சர்வ மதங்கள் சார்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

முஸ்லிம் சமய கலாசாரத் திணைக்களத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில், இஸ்லாமிய மதத் தலைவர் கலாநிதி அஸ்-ஸெய்யித் ஹஸன் மௌலானா அல்-காதிரி, கிறிஸ்தவ மதத் தலைவர் கலாநிதி நிஷான் குரே பாதிரியார் இணைந்து சர்வமதத் தலைவர்கள் சார்பில் விடைபெற்றுச் செல்லும் பணிப்பாளருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்ததுடன் பௌத்த, ஹிந்து, இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவ சர்வமதத் தலைவர்கள் வாழ்த்துக்களையும் தெரிவித்தனர்.

முஸ்லிம் சமய கலாசாரத் திணைக்களத்தின் பணிப்பாளராக சேவையாற்றிய காலங்களில் முஸ்லிம் சமூகத்துக்கு பணிப்பாளர் செய்த சேவைகளை அவர்கள் நன்றியுடன் நினைவு கூர்ந்ததோடு, ஏனைய மதங்களின் செயற்பாடுகளுக்கும் அவர் வழங்கிய பங்களிப்புக்களுக்கு பாராட்டுக்களையும் தெரிவித்தனர்.(05)

# யாழ். பல்கலைகழக்கழக ஊழியர்கள் மருத்துவபீடம் முன்பாகப் போராட்டம்

## மனித உரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்து



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள் நேற்று (வியாழக்கிழமை) கவனவீர்ப்பு போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் ஒன்றுகூடிய பல்கலைக்கழக ஊழியர்கள் குறித்த போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டம் திருநெல்வேலி சந்திவரை பேரணியாக சென்று பல்கலைக்கழகத்தை மீண்டும் அடைந்தது.

நாடு முழுவதிலுமுள்ள அரச பல்கலைக்கழகங்களில் நடைபெற்றுவரும் தொடர்ச்சியான வேலைநிறுத்தத்தின் ஒரு பகுதியாக அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும், கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுவருகிறது.



அனைத்துப் பல்கலைக்கழக தொழிற்சங்க சம்மேளனம், 'பல்கலைக்கழக கல்விசாராப் பணியாளர்களின் சம்பள முரண்பாடு, சம்பள அதிகரிப்பு மற்றும் அவர்களைப் பாதிக்கும் பிரச்சினைகளில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் அரசாங்கமும் தொடர்ந்து ஏமாற்றி வருகின்றமைக்கு' எதிர்ப்புத் தெரிவித்தே போராட்டத்தில் ஈடுபட்டனர். (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.05.2024இல் வெளியிடப்பெற்றது